





# <u>சப்தரிஷி மண்டலமும் ஒளி சரீரமும்</u>

1. தாய் நம்மைக் காக்கும் ஒரே தெய்வம்
2. தாய் தந்தையரை நாம் எப்படி மதிக்க வேண்டும்
3. அகஸ்தியன் தாயின் கருவில் பெற்ற பூர்வ புண்ணியம்
4. கருவுற்றிருக்கும் தாய் நுகர வேண்டிய அருள் உணர்வுகள்
5. இன்றைய குலதெய்வங்கள் உருவான நிலை
6. இராமேஸ்வரத்தின் உண்மைத் தத்துவம்
7. முன்னோர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை
8. ஒளிச்சரீரம் பெற ஈஸ்வராய குருதேவர் காட்டும் உறுதியான வழி
9. முன்னோர்களை விண் செலுத்தும் முறை
10. லேசர் (LASER) மூலம் ராக்கெட் விண் செல்லும், முன்னோர்களை சப்தரிஷி மண்டல ஒளியலைகள் ஒளிப்படுத்தும்
11. முன்னோர்களை கங்கையில் கரைக்கச் செய்வதின் உண்மை நிலை
12. முன்னோர்களின் சாபங்களை நீக்கும் வழி

13. உடலில் உள்ள ஆன்மாக்களை ஒளிப்படுத்தும் நிலை
14. பௌர்ணமி தியானத்தின் முக்கியத்துவம்
15. நம் உணர்வுகள் விண்ணை எட்டும் நிலை
16. சப்தரிஷி மண்டல காந்த அலைத் தொடர்பு
17. விண் செல்லும் முன்னோர்களுக்கு ஆகாரம்
18. அனைவரும் விண்ணுலக ஆற்றலைப் பெறும் தகுதி
19. சப்தரிஷி மண்டல ஆற்றலைப் பெற்று புவியில் விஷத்தன்மையை நீக்கும் நிலை

# 1. தாய்தான் நம்மைக் காக்கும் ஒரே தெய்வம்

“இந்தச் சாமியார் காப்பாற்றுவார், அந்தச் சாமியார் காப்பாற்றுவார் என்று சொல்கின்றார்கள்” என்று நீங்கள் எந்தச் சாமியாரையும் தேடிச் செல்ல வேண்டாம்.

நீங்கள், உங்கள் அம்மாவை மட்டும் தினமும் பாத நமஸ்காரம் செய்து, “அம்மா… உங்களுடைய அருளாசி வேண்டும், நல்லது நடக்கவேண்டும் என்று ஆசி வாங்கிப் பாருங்கள்.

பின் நீங்கள் காட்டிற்குள்ளேயே சென்று பாருங்கள். புலியோ, யானையோ, ஏதோ உங்களைத் தாக்க வரட்டும். அப்பொழுது, “அம்மா….” என்று அழைத்துப் பாருங்கள், அந்த மிருகங்கள் உங்களைத் தாக்காது.

யாம் உங்களிடம் சவால் விடுகின்றோம். தாயின் உணர்வுகள், நம்முள்ளே பதிவாகியிருக்கின்றது. நம்முடைய தாய், “நாம் நல்லவராக வர வேண்டும், ஆரோக்கியமாக இருக்க வேண்டும்” என்று சதா நினைத்துக் கொண்டிருப்பவர்.

நாம் குறும்புத்தனம் செய்யும் பொழுது, திட்டாமலா இருப்பார்கள். தாய், தான் பட்டினியாக இருந்தாலும், பரவாயில்லை. தன் பையனைக் காக்க வேண்டும் என்று மகனுக்கு உணவைக் கொடுக்கின்றார். தனக்கு வயிற்றுக்கு இல்லை என்றாலும் கூட, தன் மகனைக் காக்க வேண்டும் என்று பெரும் சிரமத்தையும் தாங்கிக் கொள்கின்றார். ஆனால், நாம் தாயை மதிக்கின்றோமோ? தாயை மதிப்பதில்லை.

நாம், நம் தாயை எப்படி மதிக்க வேண்டும்? நாம் எந்தக் கோவிலுக்குச் சென்றாலும், “என்னுடைய அம்மாவிற்கு அருள் உணர்வுகள் கிடைக்க வேண்டும். எனக்காக எத்தனை கஷ்டங்கள் அனுபவித்தார்களோ, அதெல்லாம் நீங்க வேண்டும். என்னுடைய அம்மா, ஆரோக்கியமாக இருக்க வேண்டும், அவர்களுடைய அருள் சொல், எனக்குள் எப்பொழுதும் இருக்க வேண்டும்” என்று எண்ண வேண்டும்.

உங்களுக்கு, ஒரு பெரிய சிரமமே வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். தொழில் வகையில் எவ்வளவோ கஷ்டம் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த நேரத்தில், நீங்கள், உங்களுடைய அம்மாவை நினைத்து, தியானம் செய்யுங்கள். காக்கும் உணர்வு வந்து, உங்களுக்குள் சிந்தனை பிறக்கும். உங்களுக்கு நல்ல வழி காண்பிக்கும். இதை, நீங்கள் உங்கள் அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

யாம் சித்தாகி இருந்த புதிது. அந்தச் சமயத்தில், பழனி அருகே பாப்பம்பட்டியில் உள்ள ஒரு பையன், அவன் மலைப்பகுதிக்கு சென்று விறகு பொறுக்கி வருபவன். தினமும் விறகு பொறுக்கச் செல்பவன். விறகு பொறுக்கி வந்தபின், வீட்டிலிருக்கும் நேரமெல்லாம், எப்பொழுது பார்த்தாலும் அவனுக்கும் அவனுடைய அம்மாவிற்கும் சண்டையாக இருக்கும்.

யாம் சுற்றுப்பயணத்தில் இருக்கும் பொழுது, இந்தப் பையனும் அவனுடைய அம்மாவும் எம்மைப் பார்க்க வந்தார்கள். அவனுடைய அம்மா சொன்னதன் பேரில், "ஏன் உனது அம்மாவை திட்டுகின்றாய்?" என்று வந்திருந்த பையனைப் பார்த்து, யாம் கேட்டோம்.

அதற்கு அவன், "என்னுடைய அம்மா என்னைப் பார்த்து, சும்மா அது, இது என்று, ஏதாவது ஒன்றை எப்பொழுது பார்த்தாலும் சொல்லிக் கொண்டே இருக்கும்" என்றான்.

"நீ அம்மாவிடம் திட்டுகளை வாங்கிய பிறகு, எங்கேயாவது வெளியே சென்றால் அடிபடுகின்றதா" என்று கேட்டோம்.

"ஆமாம், காலில் அடிபட்டது" என்று கூறினான்.

உன் அம்மா மனம் நொந்து சொன்ன பிறகு, நீ விறகு பொறுக்கச் சென்றால், "கீழே விழுவாய், கை காலில் அடிபடும்., நீ விறகு வெட்டும் பொழுது, தவறி நீ உனது கையை வெட்டிக் கொண்டிருக்கின்றாயா?" என்று கேட்டோம்.

"ஆமாம்" என்று சொன்னான்.

ஆகவே, இங்கே உன் அம்மா சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, பிறகு உனக்கு எப்படி இருக்கும்? என்று கேட்டோம்.

பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள், பையன் மேல் ரொம்பப் பிரியமாக இருப்பார்கள். அடுத்தாற் போன்று பையன் குறும்புத்தனம் செய்யும் பொழுது, "இப்படிச் செய்கின்றானே, இப்படிச் செய்கின்றானே" என்று நினைக்கின்றார்கள்.

அதனின் வேதனையின் உணர்வு பையனைத் தாக்கப்படும் பொழுது, அவனுடைய சிந்தனையைக் குறைக்கச் செய்து, அவனை மேலும் கெட்டவனாக மாற்ற முடிகின்றதே தவிர, அவனை நல்லவனாக மாற்ற முடிவதில்லை.

தாய் என்ன செய்ய வேண்டும்? "என் பையன் உயர்ந்த நிலை பெறவேண்டும். அவனுக்கு நல்ல அறிவு வரவேண்டும், சிந்திக்கும் ஆற்றல் பெறவேண்டும்" என்கிற வகையில், அவனை எண்ணும் பொழுதெல்லாம் இது போன்று செய்து பாருங்கள்.

பையன் தன் அருகில் இருக்கிற போதும், இல்லாத போதும் முன் சொன்ன மாதிரி எண்ணுங்கள். உங்களுடைய உணர்வுகளால், பையனை மாற்ற முடியும், நல்லவனாக உருவாக்க முடியும். இந்த அருள் உணர்வுகளை, அவர்களுக்கு உபதேசித்தோம்.

அதன்பின், தாயும் மகனும் சென்று விட்டார்கள். ஒரு முறை, விறகு பொறுக்குவதற்காக இந்தப் பையனும், அவனுடைய நண்பர்களுமாகச் சேர்ந்து, ஏழெட்டுப் பேர் பாப்பம்பட்டி காட்டிற்குள் சென்றார்கள். இவர்கள், காட்டிற்குள் விறகு சேகரித்துக் கொண்டிருக்கும் பொழுது, இவர்கள் இருந்த இடத்திற்கு, யானைக் கூட்டம் ஒன்று வந்துவிட்டது.

யானைக் கூட்டத்தைப் பார்த்ததும் அவர்கள் சேகரித்து வைத்திருந்த விறகுக் கட்டுகளைப் போட்டுவிட்டு ஓடத் தொடங்கினார்கள். ஓடிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரையும் யானைகள் துரத்திக் கொண்டு வந்தன.

யானைகள் துரத்திக் கொண்டு வந்ததும், எம்மிடம் உபதேசம் பெற்ற பையன், மேலும் ஓடமுடியாமல் தன் தலையில் இருந்த விறகுக் கட்டுகளை தன் முன்னால் நிறுத்தி, "அம்மா.... அம்மா..." என்று கூறிக்கொண்டே இருந்தான். இவனை விரட்டி கொண்டு வந்த யானை, அப்படியே நின்று விட்டது.


ரொம்ப நேரம் வரையிலும் அப்படியே நின்று கொண்டிருந்து. பார்த்துவிட்டு பிறகு, அங்கிருந்து நகர்ந்து போய்விட்டது. அதன் பிறகு, “தப்பித்தோம், பிழைத்தோம்” என்று ஓடி வந்துவிட்டான். பிறகு எம்மை வந்து பார்த்து, “சாமி, அம்மாவிற்கும் சக்தி இருக்கின்றது” என்று கூறினான்.

“எப்படி சக்தி இருக்கிறது” என்று கேட்டோம்.

“யானைகள் எங்களை விரட்டி வந்தன வேறு ஒன்றும் சொல்லவில்லை. “அம்மா” என்றுதான் கூறினேன். துரத்தி வந்த யானை நின்றுவிட்டது. சிறிது நேரம் பார்த்துவிட்டு, அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டது. எங்களில் ஒருவன் யானையிடம் இருந்து தப்புவதற்காக, பள்ளத்தில் குதித்துக் காலை ஒடித்துக் கொண்டான், என்று கூறினான்.

இதன் மூலம், நாம் “தாயிற்கு” எவ்வளவு பெரிய சக்தி இருக்கின்றது என்பதை அறியலாம். நமது தாயிடம் உள்ள சக்திகளை, நாம் உணர்தல் வேண்டும். ஏனென்றால், நம்மை மனிதராக உருவாக்கியதும், நம் தாய்தான். தெய்வமாக இருந்து காப்பாற்றியதும் நம் தாய்தான்.

ஆகவே, நாம் தாயை மதித்துப் பழகுதல் வேண்டும். நம் தாயின் அருளால், அகஸ்தியர் துருவனாகி, துருவ மகரிஷியான, துருவ நட்சத்திரமான, அதனின்று வரும் பேராற்றலை நாம் அனைவரும் பெறுவோம். இந்த வாழ்க்கையில் வரும் அனைத்து இருளையும் அகற்றுவோம். வாழ்க்கையில் எல்லா நலமும் வளமும் பெறுவோம். மகிழ்ந்து வாழ்வோம், மகரிஷிகளின் அருள் வட்டத்தில் இணைந்து வாழ்வோம். எமது அருளாசிகள்.



யாம் பத்ரிநாத் போகும் வழியில், மும்பைக்கு அருகில் உள்ள ஒரு ஊரில் நடந்து சென்று கொண்டிருந்தோம். யாம் ஒரு பக்கம் சென்று கொண்டிருந்த பொழுது, குருநாதர் ஒரு திசையைக் காண்பித்து, "இந்த பக்கம் செல்" என்று கூறினார்.

குருநாதர் சொல்லிய திசையில் யாம் சென்றோம். அப்பொழுது, சிலரைச் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் பிராமண ஆட்கள். அவர், அஸ்ஸாம் காட்டில் வன அதிகாரியாக இருந்தார். ஒரு பெரிய ஆபீஸர் என்ற நிலையில் இருந்தார். அவர்களிடம், சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அது சமயம், அவர்களிடையே தாய்க்கு உண்டான முக்கியத்துவத்தைப் பற்றி பேசினோம்.

அப்பொழுது, அந்தக் காட்டிலாகா அதிகாரி எம்மைப் பார்த்து, "என்னங்க எத்தனை கடவுள் இருக்கின்றது, பெரிய சாதுக்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள். ஆனால், நீங்கள் தாயை உயர்த்திப் பேசுகின்றீர்களே" என்று கேட்டார்.

மேலும், தாய் இன்று என்ன செய்கின்றது? பிள்ளைகளை எத்தனை திட்டுகளைத் திட்டுகின்றார்கள், என்னவெல்லாம் பேசுகின்றார்கள்? என்று கேட்டார்.

எம்மிடம் பேசிக் கொண்டிருந்த அதிகாரியின் குடும்பத்தில், பாகம் பிரிப்பதில் அண்ணன், தம்பிகளிடையே தகராறு இருந்திருக்கின்றது. ஆகையினால், இந்த அதிகாரிக்கு, தன் தாயின் மீது கொஞ்சம் வெறுப்பு. ஆகையினால், யாம் சொன்னதை மறுத்துப் பேசினார். "ஒரு கண்ணில் வெண்ணையும், ஒரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது போன்று இருக்கின்றது, உங்கள் பேச்சு" என்று சொன்னார்.

ஆனால், யாம் "உங்கள் தாயினால்தான் ஆபீஸராக வந்தீர்கள். ஆனால், உங்கள் தாயை வெறுக்கின்றீர்கள்" என்று இரண்டு மூன்று மணி நேரம் பேசி, சில உண்மைகளை உணர்த்தியபின், யாம் அங்கிருந்து கிளம்புவதற்கு முன், "உங்களுக்கு எப்பொழுது ஆபத்து வருகின்றதோ, அப்பொழுது "அம்மா" என்று அழைத்துப் பாருங்கள், உங்களுக்கு உதவி செய்வார்கள் என்று கூறினோம்.

உடனே அவர், "நீங்கள் பேசுவது வித்தியாசமாக இருக்கின்றது, நாங்கள் எவ்வளவு படித்திருக்கின்றோம், என்னவெல்லாம்

செய்திருக்கின்றோம், "அம்மா என்று கூப்பிட்டவுடனே வந்து காப்பாற்றுமா?" என்று கேட்டார்.

எம்மைச் சந்தித்த சிறிது நாள் கழித்து, ஒரு சமயம், அவர் அஸ்ஸாம் காட்டிற்குப் போயிருந்தார். அந்தக் காட்டைச் சுற்றிக் காண்பிப்பதற்காக, தனது மனைவியையும், தனது இரண்டு குழந்தைகளையும், ஜீப்பில் அழைத்துப் போயிருந்தார்.

ஜீப்பை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு, போட்டோ எடுத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது, அங்கே யானை ஒன்று மரத்தின் பின்னால் நின்று கொண்டிருந்ததை, யாரும் கவனிக்கவில்லை.

இவர் காட்டிலாகா அதிகாரியாக இருந்ததால், தமக்குக் காட்டைப் பற்றி தெரியும் என்பதால், எதைப் பற்றியும் பயம் இல்லாமல் இருந்தார். இருந்தாலும், இவர்களுடைய ஆர்வத்தால், பக்கத்தில் யானை இருந்ததைக் கவனிக்கவில்லை.

யானை, திடீரென்று மரத்தின் பின்னால் இருந்து வெளிப்பட்டு, அதிகாரியைத் தன் துதிக்கையினால் தூக்கிவிட்டது. அன்று யாம் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார் அல்லவா? இதன் உணர்வுகள் இவரிடத்தில் தூண்டி, யானையின் துதிக்கையில் இருந்த அதிகாரி, "அம்மா" என்று கத்தியிருக்கின்றார். ஜீப்பில் இருந்த அவருடைய மனைவியும், குழந்தைகளும் "அம்மா... அம்மா..." என்று கத்தியிருக்கின்றார்கள்.

யானை, அதிகாரியைத் தூக்கியவாறு அப்படியே வைத்திருந்தது. அவரை அடிக்கவுமில்லை, அதற்கு மேல் ஒன்றும் செய்யவுமில்லை. குழந்தைகள் "அம்மா, அம்மா" என்று சொல்லிக் கொண்டே அழுதனர். யானை, அதிகாரியைக் கீழே இறக்கிவிட்டது.

யானை, தன் துதிக்கையிலிருந்த அதிகாரியை இறக்கிவிட்ட பின், கொஞ்ச நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தது. குழந்தைகள் எல்லாம், "அம்மா... அம்மா..." என்று அதே நிலையில் கூறிக் கொண்டிருந்தனர். பிறகு, சிறிது நேரம் கழித்து, யானை அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டது.

யாம் பத்ரிநாத், கேதார்நாத் போன்ற பல இடங்களுக்குச் சென்றுவிட்டு, திரும்பும் சமயத்தில் அங்கே ஆபீஸரைத் திரும்பவும் சந்தித்தோம்.

“சாமி.... நாங்கள் என்ன பூர்வ புண்ணியம் செய்தோமோ? தெரியவில்லை. நீங்கள் சொல்லித் தந்த மந்திரம், எங்களைக் காப்பாற்றியது. நாங்கள், எத்தனையோ மந்திரங்களைக் கற்றிருக்கின்றோம். ஆனால், தாங்கள் சொல்லிக் கொடுத்த மந்திரத்திற்குண்டான சக்தி, வேறெதற்கும் இல்லை” என்று கூறினார்.

“எந்த மந்திரம் அது?” என்று யாம் அவரிடம் கேட்டோம்.

“அம்மா” என்ற மந்திரம் தான் அது என்றார். அம்மா என்று சொன்னதால்தான், யானை எங்களைத் தாக்கவில்லை. நாங்களும் தப்பிப் பிழைத்தோம் என்று கூறினார்.

உண்மையில் நடந்த நிகழ்ச்சி இது. இது போன்று, யாம் பல பேருக்கு அனுபவரீதியிலேயே, உண்மைகளை உணர வைத்திருக்கின்றோம்.

நம் தொழில், நன்றாக நடக்கவேண்டும் என்று ஆசை இருக்கும். நாம் செய்யும் தொழிலில் சிறிது நஷ்டம் வந்தால், “இப்படி வந்துவிட்டதே, இப்படி ஆகிவிட்டதே” என்று எண்ணுவோம்.

அது சமயம், தொழிலைப் பற்றிச் சிந்தித்து, தொழிலை மேம்படுத்துவதற்கான வழி முறைகளை எண்ணுவதில்லை. தொழிலில் வரும் இடைஞ்சலைச் சமாளிக்க முடியாது என்று எண்ணி, உடனே ஜோசியரை நாடுவார்கள். இப்படி, ஒரு தவறுக்குப் பல தவறுகளைச் செய்து கொண்டிருப்பார்கள்.

ஆகவே, இத்தகைய தவறுகளிலிருந்து மீள வேண்டுமா? இல்லையா? நீங்கள், உங்களுடைய தவறுகளிலிருந்து மீள வேண்டும் என்பதற்காகத்தான், யாம் உங்களுக்கு அருள் உணர்வுகளைக் கொடுக்கின்றோம். சும்மா இல்லை. அருள் உணர்வுகளுடன், அருள் சக்திகளையும் கொடுக்கின்றோம். எமக்கு, எமது குருநாதர் எப்படிச் சக்தி கொடுத்தாரோ, அதைப் போன்றுதான், உங்களுக்கும் சக்தி கொடுக்கின்றோம்.

இன்று, காற்று மண்டலமே மிகுந்த நச்சுத் தன்மையாக இருக்கின்றது. எங்கே பார்த்தாலும் தீவிரவாதம், மதத்திற்குள்ளும், இனத்திற்குள்ளும், மொழிக்குள்ளும், தீவிரவாதம் என்று, இன்று எல்லா


நிலைகளிலும் தீவிரவாதங்கள் வளர்ந்துள்ளன. அந்த நிலைகளை நாம் பார்த்து, கேட்டு அறிய நேரும்பொழுது, அந்த உணர்வுகள் நமது உடலுக்குள்ளும் வந்துவிடுகின்றது. அது நமக்குள் வலுவாக ஆகும் பொழுது, நம்முள் சிந்திக்கும் திறன் இழக்கப்படுகின்றது. நல்லவைகளை, நாம் நுகர முடியாதபடி தடையேற்படுகின்றது.

ஆகவே, இத்தகைய தீமைகளையெல்லாம் மாற்றியமைக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான், யாம் மணிக்கணக்கில் உபதேசித்து, உங்களிடத்தில் அருள் உணர்வுகளைப் பதிவாக்குகின்றோம்.

யாம் உங்களிடத்தில் பதிவு செய்த அருள் உணர்வுகளை, நீங்கள் மனதில் எண்ணி, "ஈஸ்வரா..." என்று உங்களுடைய புருவ மத்தியில் துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெறவேண்டும் ஈஸ்வரா என்று எண்ணினால், தீமைகள் வராது உங்களை நீங்கள் காத்துக் கொள்ளலாம்.

இதன் உண்மைகளை உணர்ந்து, அருள் ஞானிகளின் அருள் உணர்வுகளை தம்முள் வளர்த்து வரும் அன்பர்கள் அனைவரும், துருவ நட்சத்திரத்தின் பேரருள் பேரொளி பெற்று, தங்கள் வாழ்க்கையில் அறியாது சேர்த்த இருளை நீக்கி, மெய்பொருள் காணும் திறன் பெற்று, உயிருடன் ஒன்றிய உணர்வுகளை ஒளியாக்கும் திறன் பெற்று, என்றும் பதினாறு என்று, பெரு வீடு பெருநிலையை அடையும் நிலையாக, பேரின்பப் பெருவாழ்வாக வாழ்ந்து வளர்ந்திட, எமது அருளாசிகள்.

ஊசி முனை தவம் வேண்டாம்.
காடு, மலை தேடி போக வேண்டாம்.
அன்னை, தந்தை அருள் இருந்தால் போதும்.
குருவின் அனுக்கிரகம் எளிதில் கிட்டும்.



# 2 தாய் தந்தையரை நாம் எப்படி மதிக்க வேண்டும்

தாய், தந்தை நம்மைப் பேணிக் காக்கின்றனர். நமக்கு வேண்டிய நல்ல புத்திகளைச் சொல்கின்றார்கள். நாம், நமது காரியத்தில் வெற்றி பெறவேண்டும் என்று எண்ணி, துரித நிலைகள் கொண்டு செயல்படுகின்றோம்.

அது சமயம், குடும்பத்தில் பெரியவர்கள், அனுபவப்பட்டவர்கள் நம்மைப் பார்த்து, “சிந்தித்துச் செயல்படு” என்று கூறுகின்றார்கள்.

எதனால்? நம்முடைய அவசர கோலத்தைப் பார்த்து, நாம் சிந்தனையற்றுச் செயல்படுகின்றோம் என்று அவர்களால் உணர முடிகின்றது. இது அவர்களது அனுபவம்.

ஏதாவது ஒரு காரியம் தொடங்க முற்படும்போது, பெரியவர்கள் அறிவுரைகள் கூறினால், சிலர், சரியென்று ஏற்றுக் கொண்டு விடுவதுண்டு. ஒரு சிலர், பெரியவர்களின் அறிவரைகளை ஏற்காமல், பெரியவர்களைப் பார்த்து, இவர்கள் சனியன்கள் மாதிரி, ஏதாவது ஒன்று சொல்லித் தடைப்படுத்திக் கொண்டே இருப்பார்கள், என்று சொல்வது உண்டு.

சந்தர்ப்பம், பெரியவர்கள் நம்முடைய காரியங்களைத் தடைப்படுத்துகிறார்கள், என்று எண்ணப்படும் பொழுது, நம்முடைய சிந்தனையைச் செயல்படுத்த முடியவில்லையே என்று எண்ணப்படும் பொழுது, வேதனை என்ற நிலைகள் வந்து சூழ்ந்து கொள்கின்றன. இது போன்ற சமயங்களில், அறிவுரை கூறிய தாய், தந்தையர் மீதோ, மற்றவர்கள் மீதோ, வெறுப்பு வருகின்றது.

எல்லாவற்றையும் பார்த்துத்தான், நான் செய்து கொண்டிருக்கின்றேன். ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்காதீர்கள், என்று கோபத்துடன் பதில் சொல்ல நேருகின்றது. சிந்தித்து, மற்றவர்களுக்குத் தெளிவுபடுத்தும் நிலை இல்லை. இதனால் என்னவாகின்றது?

சந்தர்ப்பத்தால், நமது வாழ்க்கையில் நம்மிடத்தில் மோதும் தீய உணர்வுகள், நம்மிடத்திலுள்ள நல்ல குணங்களை மறைத்துவிடுகின்றது. ஆகவே, நாம் நம்முடைய நல்ல குணங்களை மறைக்கும் தீமைகளை நீக்கிவிட்டு, அருள்ஞானத்தை நமக்குள் பெருக்கும் சக்தி பெறவேண்டும்.

நமது தாய், தந்தை, பெரியவர்கள் சொல்வதைக் கேட்டு, ஒரு நிமிடம் சிந்தித்தோமானால், நமது அவசரத்தால் பெரும் நஷ்டம் ஏற்படுவதிலிருந்து, நம்மை நாம் காத்துக் கொள்ள முடியும்.

ஆகவே, சுற்றுப்புறச் சூழ்நிலையும் நாம் செயல்படும் தன்மையும் சரியில்லை என்றால், நாம் எடுத்துக் கொண்ட காரியங்கள் தோல்வியைத் தழுவும். நமது ஆரம்பமே தோல்வியைத் தழுவினால், நமது மனம் இருண்டு விடுகின்றது.

நமது தாய் தந்தை, அறிவுரை சொல்வது நமக்கு எதிர் நிலையாகும் பொழுதும், நமது முயற்சிகள் தோல்வியடையப்படும் பொழுதும், நாம் நல்லதைச் சிந்திக்கும் தன்மை இழந்துவிடுகின்றோம். இது போன்ற சில சந்தர்ப்பங்கள், நமது நல்ல குணங்களை மறைத்து விடுகின்றன.

இவைகளிலிருந்தெல்லாம் மீள்வது எங்ஙனம்? விஞ்ஞானிகள் எலெக்ட்ரிக், எலெக்ட்ரானிக் என்பதன் அடிப்படையில், மனிதர் போன்ற “ரோபாட்” என்ற இயந்திரங்களை உருவாக்குகின்றனர். தொழிற்சாலைகளில் இயந்திரங்களுக்கொப்ப, மாறுதல்களுக்கேற்ப, செயல்படும் வண்ணம் ரோபாட்டுகளை உருவாக்குகின்றனர். ஒரு வீட்டிற்கு வேண்டியவர், வேண்டாதவர் போன்றவர்களை அறிந்து இயங்கும் வண்ணம் உள்ள, ரோபாட்டுகளையும் உருவாக்கியுள்ளனர்.

ஒரு வீட்டிற்குள், திருட வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு நபர் வந்தால், இந்த ரோபாட் உடனே கண்டறிந்து, ஓலமிடும். ஏனெனில், மனித உணர்வு மாறுபட்டு வரும் பொழுது, இந்த ரோபாட் இயந்திரம் உடனே கண்டறிகின்றது.

உடனே அந்தத் திருடன்மீது, மின்சாரத்தைப் பாய்ச்சிக் கொன்று விடுகின்றது. இது போன்றுதான், நமது உயிர் எலக்ட்ரிக்காக இயங்குகின்றது, நாம் நுகரும் உணர்வுகள், எலக்ட்ரான்களாக நம்மை இயக்குகின்றன.

விண்ணிற்கு அனுப்பிய விண்கலம், அது, தான் கவர்ந்த உணர்வுகளை அலைகளாக மாற்றி, விண்ணில் பரப்பும்பொழுது, விஞ்ஞானிகள் இங்கிருந்து இயந்திரங்கள் மூலம் கவர்ந்து, விண்ணின் நிலைகளை அறிகின்றனர்.

விண்ணின் நிலைகளைப் படமெடுத்து, அறிந்து, அலைகளாகப் புவியில் பரவச் செய்யும் விண்கலத்தின் ஒரு பகுதி, பழுதாகிப் போனால், விஞ்ஞானிகள் விண்கலத்திலிருந்து வரும் தகவல்களை அறிய முடியாமல் போகின்றது. இதனால், விண்கலம் காணாமல் போய்விட்டது என்று விஞ்ஞானிகள் கூறிவிடுகின்றனர். ஆனால், அது அண்டவெளியில் பறந்து கொண்டுதான் இருக்கும்.

இன்று மனிதர்கள், தங்களுடைய குழந்தைகளோ, உறவினர்களோ காணவில்லை என்றால் பதட்டமடைகின்றனர். அவர்களுடைய இருப்பிடத்தை அறிய முடியவில்லை. இதனால். அவர்களுடைய நிலைபற்றி அறிய முடியாமல், பயம் வருகின்றது.

ஆனால், நாம் பயத்தைத் தவிர்த்து, "காணாமல் போனவர் வீடு திரும்ப வேண்டும்" என்ற உணர்வை வலுவாக்கினால், அவருடைய இயக்கங்களை மாற்றி, வீடு திரும்பும்படி செய்யலாம். அவர்கள் வீட்டை வெறுத்து, வெறுப்பாகச் செல்லப்படும்பொழுது, அவர்களுடைய உணர்வை நாம் காண முடிவதில்லை.


அன்பு கொண்டு வாழும் பொழுது, "வெளியூர் சென்ற என் பையன் ஒரு மாதமாகியும் தபால் போடவில்லையே, எப்படி இருக்கிறானோ?" என்ற வேதனையின் உணர்வை எடுக்கும் பொழுது, உணர்வுகள் வலிமையடைகின்றன.

அந்தப் பையன் அமெரிக்காவில் இருந்தாலும், அந்த பையனின் உணர்வில் மோதி, சிந்திக்கும் தன்மையை இழக்கச் செய்து, பணியில் தவறை ஏற்படுத்தி விடுகின்றன. சாலையில் நடந்து கொண்டு சென்று கொண்டிருக்கும் பொழுது, சிந்தனை மறைக்கப்பட்டு, மேடு, பள்ளம் தெரியாதபடி கீழே விழுந்து, காயங்கள் ஆகிவிடுகின்றன.

இவைகளெல்லாம் நாம் உணர்ந்து, எப்படி விஞ்ஞானிகள், மாறுபட்ட உணர்வுகள் கொண்ட ஒருவன் உள்ளே நுழைகையில், ஓலமிட்டு, அவனைத் தாக்கிக் கொல்வதற்கு, ரோபாட் என்ற இயந்திரத்தை

உருவாக்கியுள்ளனரோ, இது போன்றுதான், நாம் அருள் ஞானிகளின் அருள் உணர்வுகளை, நமக்குள் பெருக்கி வலுவாக்கும் பொழுது, அருள் ஞானிகளின் அருள் உணர்வுகள், நஞ்சான உணர்வுகளை அருகில் விடுவதில்லை.

இதை உணர்ந்து, அருள் ஞானிகள் காண்பித்த அருள் வழியில் அருளளுணர்வுகளை தம்முள் பெருக்கி வரும் அன்பர்கள் அனைவரும், தம்முள் இருளை விலக்கி, மெய்ப் பொருள் காணும் திறன் பெற்று, உயிரைப் போன்றே உணர்வனைத்தையும் ஒளியாக்கி, ஏகாந்த நிலை பெற்று, பிறவியில்லாப் பெருநிலை பெறும் நிலையாக, வேகா நிலை பெறும் நிலையாக வாழ்ந்து, இவ்வாழ்வில் உடல் நலத்துடன், மன நலத்துடன், மன வளத்துடன், வாழ்ந்து வளர்ந்திட எமது அருள் ஆசிகள்.



# 3 அகஸ்தியன் தாயின் கருவில் பெற்ற பூர்வ புண்ணியம்

பல லட்சம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த, புலஸ்தியர்கள், தன் புலனறிவால் அறிந்த, விஷத்தை முறித்திடும் வேர்களையும், மூலிகைகளையும், மின்னலின் வீரியத்தைத் தணித்திடும் வேர்களையும், மூலிகைகளையும், அவர்கள் வாழும் குகைகளின்முன், வாசலில் கட்டி வைத்திருப்பதனால், விஷ வண்டுகளோ, விஷப் பாம்பினங்களோ, மிருக இனங்களோ, யானைகளோ இவர்கள் இருக்கும் பக்கம் வராது விலகிச் சென்று விடுகிறது.

விஷத்தை முறித்திடும் மணத்தை நுகர்ந்து, அவைகள் விலகிச் சென்று விடுவதால், புலஸ்தியர் குடும்பத்தினர் பயமின்றித் தூங்கி விடுவார்கள்.

இவ்வாறு, புலஸ்தியர் வம்சத்தில், பரம்பரையாக நுகர்ந்து அறியும் சக்தி பெற்றார்கள். ஆனால், இந்தப் பரம்பரையில் கணவன் மனைவியும் சேர்ந்து ஒருவருக்கொருவர், புலனால் அறிந்ததை, கணவன் தன் மனைவிக்குச் சொல்லியும், மனைவி தனக்குத் தெரிந்ததைக் கணவனுக்குச் சொல்லியும், ஒருவருக்கொருவர் மூலிகைகளின் இரகசியங்களை அறியும் சக்தியை வளர்த்துக் கொண்டு, குகைகளில் புலஸ்தியர் குடும்பம் வாழ்ந்து வந்தார்கள், என்று குருதேவர் விளக்கமாகக் கூறினார்.

இவ்வாறு குகையில் வாழ்ந்துவரும் காலத்தில், புலஸ்தியரின் மனைவி கர்ப்பமாகின்றாள். கர்ப்பிணியின் கையில் கட்டியுள்ள விஷமுறிவு வேரின் மணத்தையும், மின்னலின் வீரியத்தைத் தடுத்திடும் வேர்களிலிருந்து வெளிப்படும் மணங்களையும், கர்ப்பிணி சுவாசிக்க நேருகின்றது. குகையில் வைக்கப்பட்டுள்ள, நோய்களைப் போக்கிடும் மூலிகைகளின் மணங்களையும், கர்ப்பிணி சுவாசிக்க நேருகின்றது.

கர்ப்பிணி நுகர்ந்த மணங்களின் உணர்வுகள், இரத்தத்தில் கலந்துவிடுவதால், அந்தத் தாயின் கருவில் வளரும் சிசுவின் உடலிலும், அது இணைகின்றது.

அதனால், சிசுவின் உடலில் விஷத்தை முறித்திடும் சக்தியும், நோய்களை நீக்கிடும் சக்தியும், மின்னலின் வீரியத்தைத் தணித்திடும்

சக்தியும், அந்தச் சிசு பெறுகின்றது. இதைப் போன்று கருவில் வளரும் சிசு, பத்து மாதமும் இந்தச் சக்தியைப் பெற்று வளர்கின்றது என்பதை, குருதேவர் விளக்கமாகச் சொல்லி வந்தார்.

குழந்தை (அகஸ்தியன்) பிறந்தபின், அந்தக் குழந்தையின் அருகில் ஈ, எறும்பு, மற்றும் விஷப் பூச்சிகள் வராது விலகிச் சென்று விடுகின்றன. இதைப் பார்த்த தாய், ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டே இருக்கிறாள். புலஸ்தியரும், குழந்தையைப் பார்த்து அதிசயப்படுகின்றார்.

குழந்தையின் வளர்ச்சியில், மற்ற குழந்தைகளைக் காட்டிலும், பார்வையிலும் செயலிலும் வித்தியாசமாகக் காணப்படுவதை, புலஸ்தியரும், அவர் மனைவியும் உணர்கின்றனர்.

இவ்வாறு குழந்தை வளர்ந்து வரும் பொழுது, மூன்று வயதில் ஒரு நாள் காணாமல் போய்விடுகின்றான். அவனைக் காடுகள், மற்றும் நீர் இருக்கும் இடங்கள் எல்லாம் தேடிப் பார்க்கிறார்கள், எங்கும் காணவில்லை.

கடைசியில் குழந்தையைக் கண்டுபிடித்தார்கள். ஓநாய்கள் இருக்கும் இடத்தில், ஓநாயைப் பிடிக்கப் போகின்றான், அது விலகிச் சென்று விடுகின்றது. இப்படி, அவன் செயல்களைப் பயத்துடனும், ஆச்சரியத்துடனும் பார்க்கின்றனர் புலஸ்தியரும், அவர் மனைவியும், இந்த நிலையில் குழந்தையைக் கூப்பிட்டு வந்துவிடுகிறார்கள். இதை எனக்குக் காட்சியாக, அதாவது, படமாகக் காணும்படி செய்தார், குருதேவர்.

புலஸ்தியர் வாழ்ந்த காலங்களில், அவர்கள் பேசிய பேச்சும், அவர்கள் உடலில் இருந்து வெளிப்பட்ட உணர்வுகள், இன்றும் நம் பூமியில் பரவி உள்ளது.

"இந்த உணர்வுகளைத்தான் உன்னை நுகரும்படி செய்து, அன்று நடந்த நிகழ்சிகளை (பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்) காட்சியாக, படமாகக் காணும்படி செய்தது" என்றார் குருதேவர்.

தினமும், குழந்தை அகஸ்தியன் வளரும் பருவத்தில், ஒவ்வொரு அற்புதச் செயல்களைச் செய்து கொண்டிருப்பான். மலை வாழ் மக்களுக்கு, நோய்களுக்கொப்ப மூலிகைகளைப் பறித்து வந்து, அதைக் கொடுத்து நோய்களைக் குணப்படுத்துவான்.

காட்டுக்குள் போகும்போது தனியாகப் போவான், வரும்போது ஏதாவது விஷப் பாம்பைப் பிடித்து வருவான், அதை வைத்து மற்ற குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவான். பின் அதைக் காட்டில் விட்டு வந்து விடுவான் என்று குருதேவர் விளக்கமாகச் சொல்லி, காட்சியாகவும் காணச் செய்தார்.

அகஸ்தியன், நான்கு வயதுக் குழந்தைப் பருவத்தில், ஒரு செடியில் இருந்து வெளிப்படும் மணத்தை நுகர்ந்து அறிகின்றான், மாறுப்பட்ட செடியின் மணத்தையும், நுகர்ந்து அறிகின்றான். இரு மணத்தின் உணர்வுகள் சேர்ந்து, தன் உடலின் உணர்ச்சிகள் எப்படி இயக்குகின்றது என்று, தன் அகத்தின் இயக்கத்தை அறிவாக உணர்கின்றான்.



# 4 கருவுற்றிருக்கும் தாய் நுகர வேண்டிய அருள் உணர்வுகள்

குருநாதர், காடு மேடாக எம்மை அழைத்துச் சென்றார். அன்றைய காட்டுவாசிகளான அகத்தியரின், தாய் தந்தையரின் காட்டு வாழ்க்கைகளையும், அங்கே உணர்த்தினார், குருநாதர்.

காட்டுவாசிகளான அகத்தியரின், தாய் தந்தையர் ஆங்காங்கு, எந்த உயிரினங்கள் அதிகமாக அங்கே வசிக்கின்றதோ, அதற்குத்தக்க பச்சிலைகளை அரைத்து, தங்களுடைய உடலில் பூசிக் கொள்வதை பழக்கமாக மேற்கொண்டனர். அவர்களுடைய உடல்களில் இருந்து வெளிப்படக்கூடிய, மூலிகைகளின் மணத்தை முகரும் விஷ ஜந்துக்களோ, கொடிய மிருகங்களோ, அவர்களின் அருகில் வருவதில்லை.

அவர்கள் பூசிய மூலிகைகளின் மணம், தங்களை மிருகங்களிலிருந்தும், விஷ ஜந்துக்களிடமிருந்தும் காப்பதாக எண்ணினார்கள். ஆனால், அவர்களுடைய உடல்களில் பூசிக் கொண்ட மூலிகைகளின் மணம், அவர்களிடம் வரும் விஷத்தை அடக்கும் சக்தியாக இருந்தது.

இந்த நிலையில், அவர்கள் காலையில் சூரியனை உற்றுப் பார்த்து, சூரியனின் காந்த புலன்களை, தங்களுக்குள் கவரும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்தது.

காரணம், அக்கால மக்கள், சூரியனை தங்களுடைய கடவுளாக வணங்கினார்கள். மற்ற உயிரினங்களுக்கு, வெளிச்சம் ஆகாது. ஏனென்றால், பெரும்பாலும் உயிரினங்கள் இரவில்தான், தங்களுடைய இரையைத் தேடும். சூரியனின் ஒளியைக் கண்டதும், தங்களுடைய இருப்பிடங்களுக்குத் திரும்பிவிடும்.

ஆகையால், அந்தக்கால மக்களுக்கு, சூரியன் தங்களுக்கு பாதுகாப்பு தருவதாகக் கருதி, சூரியனைக் கடவுளாக வணங்கினார்கள்.

ஆக, அந்தக் காட்டுவாசிகள், தங்களுடைய உடலில் பூசிக்கொண்ட மூலிகை முலாம்களால், இவர்கள் சூரியனை, நேரடியாகப் பார்க்கும்

தன்மை பெற்றார்கள். நேரடியாக சூரியனைப் பார்க்கும் பொழுது, அவர்களுக்கு கண்கள் கூசுவதில்லை.

இதன்வழி கொண்டு, பிரபஞ்சத்தில் உருவாகின்ற உணர்வுகளையும், கோள்கள் நஞ்சின் தன்மைகளை வெளிப்படுத்துவதையும், நட்சத்திரங்கள் நஞ்சின் தன்மைகளை உமிழ்வதையும், இவர்கள் உடலில் உள்ள, விஷத்தன்மையால், அறியும் ஆற்றல் பெறுகின்றார்கள், என்ற நிலையை குருநாதர் தெளிவாக எமக்குக் காண்பித்தார்.

காட்டுவாசிகளின் நிலையில், பெண்கள் தாம் கர்ப்பமாக இருக்கும்பொழுது, கரு உருவானபின், தொண்ணூறு நாட்களுக்குள், இத்தகைய முலாம்களை பூசிக் கொள்ளும் பொழுது, அவர்கள் விஷத் தன்மையை அடக்கும் வாசனையை நுகர்கிறார்கள் அப்படி, பெண்கள் விஷத்தன்மையை அடக்கும் வாசனையை நுகர்வதால், அந்த பெண்களின் கருவில் விளையும் சிசுக்களிடத்தில், விஷத்தன்மையை அடக்கும் சக்தி விளைகின்றது.

உதாரணமாக, ஒரு பெண் கர்ப்பம் உருவாகி, தொண்ணூறு நாட்களுக்குள், கர்ப்பமான பெண்ணை ஒரு தேள் கொட்டிவிட்டால், அந்தத் தேளின் விஷம், பெண்ணின் கருவிலிருக்கும் சிசுவினிடத்தில் இணைந்துவிடும். அந்தக் குழந்தை பிறந்தபின், தேளைக் கையில் எடுத்தால், தேள், அந்தக் குழந்தையை ஒன்றும் செய்யாது. கொட்டாது, கொட்டினாலும், தேளின் விஷம், குழந்தையைப் பாதிக்காது.

இது போன்ற நிலைகள் கொண்டு, அகத்தியரின் தாய் தந்தையர் பெற்ற உணர்வுகள், தாயின் கருவிலிருந்த சிசுவினிடத்தில் பதிவானது. தாய் தந்தையர், கொஞ்சம்தான் கண்டார்கள். ஆனால், கருவிலிருந்த சிசுவினிடத்தில், வீரிய சத்தாக உருவானது.

அகத்தியரின் தாய் தந்தையர், தங்களிடத்தில் பெற்ற விஷத்தன்மை அடக்கும் சக்தியைக் கொண்டு, சூரியனிலிருந்து வெளிப்படும், விஷத்தன்மைகளை, அவர்கள் உற்றுப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு விஷம், எவ்வளவு தூரம் வேகமாக ஊடுருவி செல்கின்றதோ, அதைப்போன்று, அவர்களுடைய உடலில், விஷத்தை அடக்கும் சக்தி பெற்றதால், எண்ணங்களை, விண்ணை நோக்கிச் செலுத்தி, கண்ணால் ஈர்த்து, வெகு தொலைவில் இருப்பதை, அறியும் ஆற்றல் பெற்றார்கள்.

இதன்வழி கொண்டு அகத்தியரின் தாய் தந்தையர், நட்சத்திரங்கள் எவ்வாறு இயங்குகின்றது? நட்சத்திரங்கள் எப்படி, பிற மண்டலங்களிலிருந்து, தன் உணவை எடுத்துக் கொள்கின்றது? தன் உணர்வை, பிரபஞ்சத்தில் எப்படி பரப்புகின்றது? அதைக் கோள்கள், தனக்குள் எப்படி எடுத்து, தங்களை வளர்த்துக் கொள்கின்றன? அதை சூரியன் எவ்வாறு கவர்கின்றது? என்ற பேருண்மைகளைக் கண்டுணர்ந்தார்கள்.

இப்படி அகஸ்தியனின், தாய் தந்தையர் பெற்ற உணர்வுகள், தாயின் கர்ப்பத்தில் இருக்கும் சிசுவினிடத்தில் பதிவானது. அகஸ்தியரின் தாய் தந்தையர், சிறிதுதான் கண்டார்கள், ஆனால், கருவிலிருந்த சிசுவிற்கு, வீரிய சத்தாக உருவானது.

அகஸ்தியரின் தாய் தந்தையர், விஷத்தை அடக்கும் மூலிகைகளை தங்களது உடலில், முலாமாக பூசிக் கொண்டதால், அந்த விஷத் தன்மைகள், இவர்களது உடலிலுள்ள நல்ல அணுக்களை, சிறிது சிறிதாக கொல்லத் தொடங்கியது. ஆனால், கருவிலே இருக்கும் சிசுவினிடத்தில் விஷத்தை அடக்கும் ஆற்றலாக வளர்ந்தது.


பத்து மாதங்களானபின், குழந்தை பிறந்தது. எப்பொழுதும், குழந்தைகள் பிறந்தவுடன், மேல் நோக்கிதான் பார்க்கும். அப்படி, அந்தக் காட்டில், குழந்தையைப் படுக்க வைக்கப்படும் பொழுது, அந்தக் குழந்தை, வானில் தாய் தந்தையர், எதனின் உணர்வுகளைப் பார்த்தனரோ, எதனின் உணர்வுகள், கருவில் சிசுவாக இருந்தபோது பதிந்ததோ, அதனின் நினைவாற்றல் அந்தக் குழந்தையை, விண்ணையே பார்க்க வைக்கின்றது.

ஆனால், பிறமண்டலங்களிலிருந்து வரக்கூடிய நிலைகளை, நட்சத்திரங்கள், பால்வெளி மண்டலங்களாக மாற்றுவதும், துகள்களாக மாறுவதையும், கோள்கள் அதை கவர்வதையும், காண்கின்றது, அந்தக் குழந்தை.. ஆனால், உணரும் தன்மை இல்லை. காட்சிகளை, உணர்வுகளாக உணரும் தன்மை, சிறிது சிறிதாக, வருகின்றது.

இவ்வாறு, அந்தக் குழந்தை வளர்ச்சி பெற்று வரும் வேளையில், அவருடைய தாய் தந்தையர், தங்களுடைய உடலில் சேர்த்துக் கொண்ட விஷத்தை அடக்கும் ஆற்றல்கள், அவர்களை மனிதனாக உருவாக்கிய அணுக்களை, முழுமையாகக் கொன்றுவிடுகின்றன.

ஆகையால், இந்தக் குழந்தை பிறந்ததிலிருந்து தானாக வளரத் தொடங்குகிறது. குழந்தை ஐந்து வயது வரப்படும்பொழுது, விண்ணுலக ஆற்றலை, சொல்லாகச் சொல்லும் தன்மை பெறுகின்றது.

அதன் தொடர்பு கொண்டு, விண்ணுலக ஆற்றல்களைக் கண்டுணர்ந்து, தமக்குள் பெற்று, உலகுக்கு வெளிப்படுத்திய முதல் மனிதராக, அகஸ்தியர் உருவானார்.



# 5. இன்றைய குலதெய்வங்கள் உருவான நிலைகள்

இன்றைய காலத்தில், குலதெய்வங்களை வணங்கும் முறைகள் அனைத்தும், அரசர்கள் காண்பித்த நிலைகளிலேயே தொடர்கின்றது. முதல் மூல குலதெய்வம், எதுவென்று கேட்டுப் பாருங்கள்? சொல்வார்கள், தீயில் மாண்டவர், எங்களுக்கு குலதெய்வமாக இருந்து, உதவிகளைச் செய்கின்றார் என்று கூறுவார்கள்.

அரச காலத்தில், அரசர்கள் தாங்கள் போர்களுக்குச் செல்லும் பொழுது, மந்திரங்களைக் கையாள்வார்கள். கூட்டமைப்பாகப் போர்களுக்குச் செல்லும் பொழுது, அதில் யாராவது ஒருவர், தங்கள் குழந்தையைக் கொடுத்து உதவி செய்வார்கள். அதனுடைய தாய், தந்தையரும் அங்கு இருப்பார்கள். இவர்களை, குலதெய்வங்களுக்குத் தாய் என்று கூறுவார்கள்.

இத்தகைய நிலைகளில் அவர்களை வளர்த்து, அதற்கு என்னென்ன சாங்கியங்களோ அதைச் செய்து, அதற்கிணையான உணர்வுகளையும் கொடுத்து, பழி தீர்க்கும் எண்ணங்களையும், எதிரிகளை வீழ்த்தும் முறைகளையும் அவர்களுடைய உணர்வில் ஏற்றுவார்கள். அதன்பின், அவர்களைத் தீயில் எரித்து, இந்த மந்திர ஒலிகளில் எடுத்து ஏவல், பில்லி, சூன்யம் என்று, எதிரிகளின் மேல் பாய்ச்சுவார்கள்.

படைகளுக்குத் தலைமை தாங்கியவர்கள், அவர்களுடைய குல வழியில் நிறையப் பிரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு, ஆக, ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு குலதெய்வம் என்ற நிலையாகிவிட்டது.

அதிலிருந்து பிரிக்கப்பட்ட உணர்வுகள்தான், சாதாரண மனிதனுக்குள் நுழைக்கப்பட்டு, இன்று நாம் குலதெய்வங்களாக வணங்கி வரும் நிலைகள். இதன் வழியில் உடலை விட்டுச் சென்றவர்களை, நாம் குடும்பப் பற்றுடன் ஈர்க்கப்படும்பொழுது, குடும்பத்தில் மீண்டும், அந்த உணர்வின் தன்மை நுழையும் பொழுது, பகைமை என்ற நிலைதான் வளர்க்கின்றது.

ஒரு சமயம் ஒரு பெண், தன் குல தெய்வத்தை வணங்கும் பொழுது, அந்தப் பெண்ணிடத்தில் அருளாடல் ஏற்பட்டு, கீழே விழுந்து, கை எலும்பு முறிந்துவிட்டது. இதனை, குருநாதர் எமக்குக் காண்பித்து விளக்கினார். குலதெய்வம் என்று ஆட்டம் ஆடியது. அந்தக் குடும்பத்திற்கு, அருள்

வாக்கு கொடுத்தது. ஆனால், அந்த ஆன்மா கால் பிசகி, கீழே விழும் பொழுதுதான், அந்தப் பெண்ணிற்குக் கை முறிந்தது.

எல்லோரையும் காக்க வந்த அந்த ஆன்மா, முதலில், அந்த பெண்ணைக் காக்க வேண்டுமல்லவா? என்று குருநாதர் வினாக்களை எழுப்பி, இதுவெல்லாம் எந்த வழியில் நடந்து கொண்டிருக்கின்றது? என்ற நிலையைக் காட்சிபூர்வமாகக் காண்பித்து, இந்த உணர்வுகள், எப்படி தொடர் வரிசை கொண்டு இங்கே புகுகின்றது, அவர்களுடைய எண்ணங்கள், எப்படி இங்கே செயல்படுகின்றது? என்ற நிலையைத் தெளிவாகக் காண்பித்தார்.

மனிதன் ஒருவன் இறந்தபின், அவனுடைய நிலை என்னவென்று நீங்கள் அறிதல் வேண்டும். இதனின் நிலைகளை, நாம் கண்கூடாகவும் பார்க்கின்றோம். ஒருவன் உடலில் ஆவி புகுந்தபின், ஆவியை விரட்டுகிறோம் என்று, என்னென்னவோ செய்கின்றனர். ஆனால், முடிவதில்லை.

மனித உடலை விட்டுப் பிரிந்து சென்ற உயிரான்மா, இன்னொரு உடலுக்குள் புகுந்து, கொன்றிடும் நிலையும், புசிக்கும் நிலையும் அடைகின்றது. மனிதனின் உணர்வுகள் இப்படித்தான் மாற்றப்பட்டு, தேய்பிறை என்ற நிலைக்கே செல்கின்றது. ஆகவே, மனித வாழ்க்கையில், நாம் மீண்டும் தேய்பிறை என்ற நிலைக்குச் செல்லாது, நம் உணர்வுகளை அருள் மகரிஷிகளின் அருள் வட்டத்தில், செலுத்த வேண்டும்.

தியானவழி அன்பர்கள் அனைவரும், ஒருவருக்கொருவர், இதைப் போல தியானத்தைக் கடைப்பிடித்து, மூதாதையர்களின் உயிரான்மாக்களை சப்தரிஷி மண்டலத்துடன் இணையச் செய்து, உடல் பெறும் உணர்வுகளைக் கரைத்திடும் நிலையைப் பழகவேண்டும்.

இதன் தொடர்கொண்டு, நம்முடைய எண்ணங்களும், அங்கே துரித நிலையில் செல்கின்றது. விண்ணின் ஆற்றலை நம்முள் கவர்ந்து, நம் இரத்த நாளங்களில் பெருக்க உதவுகின்றது.

ஆகவே, இதன்வழி கொண்டு, நாம் மூதாதையர்களின் உயிராத்மாக்களை, விண் செலுத்துவோம். விண் சென்ற மூதாதையர்களின் அருள் துணை கொண்டு, நாம் நம்முள் விண்ணின் ஆற்றலைப்

பெறுவோம். நாம் நம்முள் அறியாது சேர்த்த இருளை அகற்றுவோம். உடல் பெறும் உணர்வை நீக்கி, பிறவியில்லாப் பெருநிலை பெறுவோம்.

எவரொருவர், இதன் உணர்வு கொண்டு தம்முள் உயர்ந்த உணர்வின் தன்மையை வளர்க்கின்றனரோ, அவர் சப்தரிஷிகளின் அருள் வட்டத்தில் வாழ்ந்து, தெளிந்த மனதுடன், மகிழ்ந்திடும் உணர்வுடன், தொழில் வளத்துடன், மன நலத்துடன், மன பலத்துடன், உடல் நலத்துடன் வாழ்ந்து, மரணமில்லாப் பெருவாழ்வு என்ற, பெருவீடு பெருநிலையைப் பெறும் தகுதியைப் பெற்று, எல்லாக் காலத்திலும் பேரின்பப் பெருவாழ்வாக வாழ்ந்து வளர்ந்திட, எமது அருள் ஆசிகள்.

# 6 முன்னோர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமை

நம்முடைய முன்னோர்கள் நம்மை வாழ வைத்து, மனிதனாக உருவாக்குவதற்காக, அவர்கள் உடலில் அறியாது நஞ்சைச் சேர்த்து, நஞ்சு கொண்ட உணர்வு கொண்டு, உடலை விட்டுப் பிரிந்து சென்ற அந்த உயிராத்மாக்களை, நாம் பிறவியில்லா நிலை அடையச் செய்ய வேண்டும்.

நமக்காகப் பல துயரங்களைப்பட்ட, நம் குலதெய்வங்களின் உயிராத்மாக்களை, கூட்டமைப்பாக, வலுக்கொண்ட எண்ணங்களைக் கூட்டி, நம்மைக் காத்த உயிரான்மாக்களைப் பிறவா நிலை பெறச் செய்யவேண்டும். அவர்களைச் சப்தரிஷி மண்டலத்துடன் இணைத்து, அந்த உணர்வின் ஆற்றலைக் கலக்கச் செய்து, அடுத்து நஞ்சான உடலாகப் பெறும் உடலைக் கருக்கச் செய்து, அவர்கள் அங்கே செல்ல வேண்டும்.

பூமியின் ஈர்ப்புக்குள் சிக்கி, நம் உடல் வளர்ந்தது. பூமியின் ஈர்ப்புக்குள் வந்து, உணர்வுகள் தோன்றியது. பூமியின் ஈர்ப்புக்குள், நாம் வாழ்ந்து பழகியவர்கள்.

ஆக, இதைக் கடந்து, நாம் செல்ல வேண்டும் என்றால், இந்தப் பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், சூட்சும உடலடைந்த முன்னோர்களை விண்ணுக்குத் தள்ளி, சப்தரிஷி மண்டலங்களுடன் இணைக்கச் செய்து, நம் மூதாதையர்களின் உயிராத்மாக்களை, அங்கே சுழலச் செய்வதுதான் நம் கடமை.

நம்மை ஈன்ற தாய் தந்தையை, தன்னை வளர்த்திட்ட முன்னோர்களின் உயிராத்மாக்களை, நாம் விண் செலுத்துகின்ற பொழுது, நமது எண்ணமும் அங்கே செல்கின்றது. இதுவே கூர்ம அவதாரம்.

சூரியனைச் சுற்றி மற்ற கோள்கள் சுழல்வது போல, முதல் மனிதன் அகத்தியன் துருவத்தையடைந்து, துருவ மகரிஷியாகி, துருவ நட்சத்திரமானான். அதன் ஈர்ப்பு வட்டத்தில், (சப்தரிஷி மண்டலம்) அவரைப் பின்பற்றிச் சென்றவர்கள், எண்ணிலடங்காது, முப்பத்து முக்கோடி தேவாதி தேவர்கள் என்று சொல்வார்கள். நாம் அனைவரும், அங்கே செல்ல வேண்டும்.

# 7 இராமேஸ்வரத்தின் உண்மைத் தத்துவம்

நம் எண்ணத்தால் உருவாக்கப்பட்டதுதான், நமது உடல். இதைத்தான், ஞானிகள் "இராமேஸ்வரம்" என்று வைத்தார்கள். நாம் எதை எண்ணினோமோ, அதன் வழிப்படி, இந்த உடலான பரத்தை உருவாக்கியது உயிர். இதுதான் இராமேஸ்வரம்.

ஸ்தலபுராணத்தை உருவாக்கி, இதே எண்ணத்தால் ஒளி என்ற உணர்வு பெற்ற, துருவ நட்சத்திரத்தின் உணர்வைப் பெறச் செய்வதற்கு, இராமேஸ்வரத்தை அமைத்தார்கள். அங்கு, அதிகாலை 4.00 மணியில் இருந்து 6.00 மணிக்குள், துருவ நட்சத்திரத்தைப் பார்க்கலாம் என்பதற்காகக் கோவிலை அமைத்தார்கள்.

அதன் உணர்வை, ஒரு மண்டலம் (48 நாட்கள்) வளர்த்துக் கொண்டபின், நம் குடும்பத்தில் நமது மூதாதையர்களையோ, உடலை விட்டுப் பிரிந்து சென்றவர்களையோ, விண் செலுத்தி, துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் வாழும், சப்தரிஷி மண்டலத்துடன் இணைக்க முடியும்.

மூதாதையர்களின் உணர்வு நமக்குள் உண்டு. அதன் துணைகொண்டு, "எங்களுடன் வாழ்ந்து வளர்ந்த குலதெய்வமான உயிராத்மாக்கள், சப்தரிஷி மண்டலத்தில் கலந்து, உடலில் பெற்ற நஞ்சுகள் கரைந்து, பெருவீடு பெருநிலை அடைந்து, அழியா ஒளிச் சரீரம் பெறவேண்டும்" என்று, பிறவி இல்லா நிலை அடையச் செய்யும் இடம் அது.

சிறிது காலமே மனித உடலில் வாழ்கின்றோம். இந்த மனித உடலில், மனதைக் குவித்தல் வேண்டும். அதாவது, மனதில் எல்லாக் குடும்பங்களும் நல்லது பெறவேண்டும் என்று எண்ண வேண்டும். இதைத்தான், இராமேஸ்வரத்தில் இராமன் மணலைக் குவித்ததாக, இராமாயணத்தில் காட்டினார்கள். இராமேஸ்வரத்தில், மனிதனுடைய பொக்கிஷம் அத்தனையும் உண்டு.

27 நட்சத்திரங்களின் சத்தை, சூரியன் எவ்வாறு பாதரசங்களாக மாற்றுகின்றதோ, அதே போன்று, 27 நட்சத்திரங்களின் சத்தை சூரியன் கவர்ந்து, இயக்க அணுவாக மாற்றியதை, ஜீவ அணுவாக்கி, இந்த உடலை உருவாக்கியது உயிர்.

மனிதனானபின், 27 நட்சத்திரத்தையும் சேர்த்து, முழுமை அடையும் பக்குவத்தைத்தான், இராமேஸ்வரத்தில் காட்டினார்கள். இராமேஸ்வரத்தில் 27 கிணறைக் காட்டி இருப்பார்கள். எது எது உணர்வுகள் ஊற்றெடுத்து, நமக்குள் ஒன்றாக்குகின்றது என்று, இராமேஸ்வரத்தில் காட்டப்பட்டது. நம் மனதைக் குவிக்கும் இடம், இராமேஸ்வரம்.

அங்கு நம் மூதாதையர்களை எண்ணி, "எங்களுடன் வாழ்ந்து வளர்ந்த மூதாதையர்கள், சப்தரிஷி மண்டலத்தில் கலந்து, உடலில் பெற்ற நஞ்சுகள் கரைந்து, துருவ நட்சத்திரத்தின் ஈர்ப்பு வட்டத்தில் வாழவேண்டும்" என அவர்களை விண்செலுத்தும் இடம் அது. மனிதன் ஒருவன்தான், அதைப் பெறமுடியும். கடைசி முடிவு.

அணுக்களாகச் சேர்த்து, சூரியனாகி, பிரபஞ்சமாகி, பிரபஞ்சத்தில் உயிரணுவாகி, உயிரணு தோன்றியபின், ஒளியின் உடலாவதுதான், இறுதி நிலை. ஆகையால், முதாதையர்களை முறைப்படி விண் செலுத்தினால், அவர்கள் பிறவி இல்லா நிலை அடைகின்றனர்.

அவர்கள் முன் சென்றால், அதை நாம் அனைவரும் எளிதில் பெற்று, நம் ஆன்மாவைப் புனிதப்படுத்தி, எளிதில், நாம் எல்லோரும், அங்கு சப்தரிஷி மண்டலத்திற்குச் செல்லலாம்.



# 8 ஒளிச்சரீரம் பெற ஈஸ்வராய குருதேவர் காட்டும் உறுதியான வழி

யாம் ஒரு முறை, இமயமலைக்குப் போகும் பொழுது, ரிஷிகேசத்தில் இருந்து, கொஞ்ச தூரம் போகச் சொன்னார் குருநாதர். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, ஒருவர் காயகல்ப சித்தி என்ற கற்றுணர்ந்த உணர்வின் பாடம் கொண்டு, தவமிருந்து பெறவேண்டும் என்ற நிலையில், சிவத்தை வணங்கினால் அவனின் நிலையை நாம் பெறுவோம் என்று, "ஓம் நம சிவாய" என்ற உணர்வையே ஜெபித்து, கல்லறைக்குள் இறக்கச் செய்து, உணர்வின் ஒலி அலைகளை வெளிப்படுத்தி, தன் உடலுக்குள் சிறைப்பட்டிருந்தார்.

இப்படி ஆயிரக்கணக்கான வருடங்கள் தவம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது, யாம் இதைப் பார்த்தறிய வேண்டும் என்பதற்காக வேண்டி, பேரிச்சம்பழமும், பிஸ்கட்டும் வாங்கிக் கொண்டு சென்றோம்.

குருநாதர் சொன்ன குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றேன். அங்கு ஒரு சிறிய கோயில் இருந்தது, "அங்கே உட்கார்" என்றார். உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்தோம்.

தியானம் செய்து கொண்டிருந்த பொழுது, எங்கேயோ பெய்த மழை, தண்ணீர், வெள்ளமாக வந்தது. ஒரே அடியில், எம்மைக் கோயில் சுவரோடு சேர்த்து மோதச் செய்தது. தண்ணீர் மட்டம், வெகு வேகமாக உயர்ந்தது. தண்ணீரால் குளிர் அதிகமானது. யாம், இடுப்பில் ஒரு வேஷ்டி மட்டும் கட்டியிருந்தோம், அதுவும் நனைந்துவிட்டது.

பையில் வத்திருத பேரிச்சம்பழமும் தண்ணீரோடு போனது, பிஸ்கட்டும் கரைந்து போனது. இதனால் எமது அடுத்தவேளை சாப்பாடும் போனது. தண்ணீர் மட்டம் 7 அல்லது 8 அடி உயரம் இருந்தது. தண்ணீரோடு சேர்ந்து, கோயில் சுவற்றின் மேலே ஏறி, நின்று கொண்டோம். அதற்கு மேலும் ஒரு அடி தண்ணீர்.

"சரி, இன்று நம்மை குருநாதர் தண்ணீரிலேயே போ, நீர் சமாதி என்று சொல்லுவார்களே, அது போன்று, நமக்கு இன்று நீர் சமாதிதான்,

இந்த உடலில் திரிந்தது போதும், நீர் சமாதி ஆகிவிடு" என்று குருநாதர் சொல்லிவிட்டார் என்று இந்த உணர்வுகளில் இருந்தோம்.

பிறகு, குருநாதர் எமக்கு நினைவுபடுத்தினார், "உன்னை எதை எடுக்கச் சொன்னால், நீ எதை எடுத்துக் கொண்டிருக்கின்றாய்? தண்ணீரில் எதிர் நீச்சல் போட்டு, தண்ணீர் உன்னை இழுக்காத வண்ணம் உன் உணர்வைக் கொண்டுவரச் சொன்னால், சுவற்றின் மேல் ஏறி உன்னை எதை எண்ணச் சொன்னது?

வானுலக உணர்வை உனக்குள் எடுத்து, அந்த உணர்வை வலு சேர்த்து, நீ எதிர்த்து நில்" என்று கூறியபின் குருநாதர் உபதேசித்த உணர்வை எடுத்தோம். அதன்பின் தண்ணீர் மேலும் 1.5 அடி உயரம் வந்தது, பிறகு, சிறிது நேரத்தில் சர சர என தண்ணீர் மட்டம் குறைந்தது.

இது எப்பொழுது நடந்தது? அதிகாலை 3.00 மணியிலிருந்து 4.00 மணிக்குள் இருக்கும். அந்த நேரத்தில், வியாசகரைப் போன்று விண்ணின் உணர்வுகளை எடுக்கச் சொல்லுகின்றார். குருநாதர் சொன்ன உணர்வை வலிமை ஆக்கியபின், யாம் நின்றிருந்த கோயில் சுவற்றிலிருந்து, இறங்குவதற்குப் படிகள் இல்லை. ஆகவே கீழே குதித்தோம்.

குதித்து, கீழே வந்து பார்த்தால், கோயிலுக்கு முன் பெரிய விருட்சம், பெரிய விழுதுகளுடன் இருந்தது. விழுதுகளுக்குள் சென்று பார்த்தால், கல் கட்டிடம் தெரிந்தது. அதற்குள்ளிருந்து, "ஓம் நம சிவாய, ஓம் நம சிவாய" என்று சப்தம் வந்தது. அந்தச் சப்தத்துடன் நல்ல மணங்களும் வந்தன.

அப்பொழுது குருநாதர் சொன்னார்., "பிறவியில்லாத நிலை அடைதல், காயகல்ப சக்தி பெறுதல் என்று சொல்கின்றார்களே" அந்த நிலையில், தான் மற்ற எந்த உடலுக்குள்ளும் செல்லாது, தன்னுடைய உடலுக்குள்ளே சிறைப் பிடித்து வைத்தது போன்ற நிலையில் கடும் தவம் இருக்கின்றார்.

ஆனால், அவரால் தன் உடலில் எடுத்துக் கொண்ட உணர்வின் ஒளியைத் தெரிய முடியவில்லை?. இங்கே சமாதியாகி, 1000 வருடங்கள் ஆகிவிட்டது. 1000 வருடத்தில் அவருடைய உடலின் நிலையைப் பார். உணர்வை ஒளியாக்கி. அதிலேதான் இருக்கின்றது. ஆனால், பலன் ஏதும் இல்லை.

அவர் அழியா ஒளிச் சரீரம் என்ற பாடநிலையைக் கற்றுக் கொள்ளவில்லை. திருமணம் அவருக்கு ஆகவில்லை. சிவனை

அடையவேண்டும் என்று நினைத்தார், ஆக, இந்த உடலான சிவனுக்குள்தான் அடைப்பட்டிருக்கின்றார். இதை நீ எப்படி மாற்றப் போகின்றாய்? என்றார்.

அதன் பிறகு, குருநாதர் சொன்னார். “இவர்கள் கடுமையான தவம் பெற்றவர்கள். இந்த உணர்வுகள் உனக்குள் பட்டதனால், ஓதி அவர்களுடைய உணர்வை எடுக்க முடியாது.

அவருடைய ஆன்மா, சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று நினைவலைகளை உனக்குள் பரப்பு. அவர், தாம் எடுத்துக் கொண்ட உணர்வின் தன்மை, ஒளியின் சரீரம் பெற வேண்டும், பேரின்பப் பெருநிலை பெறவேண்டும் என்ற உணர்வை எடுத்துக் கொள்” என்று கூறினார்.

குருநாதர் உரைத்த வண்ணம், உணர்வின் ஒலி அலைகளை யாம் எடுத்துக் கொண்டபின், தவமிருந்த உடலிலிருந்த ஆன்மா வெளியில் வந்தது. அப்பொழுது, யாம் எண்ணியபடி விண் சென்றடைந்தது. ஒளியின் சரீரம் பெற்றது. அப்பொழுதுதான், அவ்வளவு தவமிருந்தவர்களுடைய உணர்வையும், அருளையும் யாம் பெறமுடிந்தது.

சாதாரண நிலையில், இன்று நாம் ஒன்றுமே செய்திருக்க முடியாது. இப்பொழுது, உடலை விட்டு பிரிந்தவர்களைப் பார்த்தவுடனே விண் செலுத்துகின்றோம் என்றால், என்ன காரணம்?


விண் சென்ற உணர்வின் வலுவை எடுத்து, இவர்களை சப்தரிஷி மண்டலங்களுடன் இணைக்கின்றோம். அப்படி இணைக்க வேண்டும் என்றால், முதலில், விண்ணில் அங்கே பெரியவர்கள் இருக்கவேண்டும். அவர்களின் உணர்வின் தன்மையினைப் பெற்றுத்தான், இங்கே எடுக்க வேண்டும். குருநாதர் காண்பித்த அருள் வழியில், இவைகளை யாம் தெரிந்து கொண்டோம். ஏனென்றால் அவர்கள் சக்திவாய்ந்தவர்கள்.

இதைப் போன்று, உடலை விட்டுப் பிரிந்து சென்ற மூதாதையர்களை நினைவு கூர்ந்து பதிவாக்கி, விண் செலுத்தினால், அவர்கள் உடலில் பெற்ற நஞ்சுகள் கரைகின்றன. ஒளியின் சரீரமாகின்றது.

பௌர்ணமி நாட்களன்று இரவு 7,00 மணியிலிருந்து 9.00 மணிக்குள் சப்தரிஷி மண்டலம் அருகில் வருகின்றது. அது சமயம், நாம் கூட்டமைப்பாக இருந்து, உடலை விட்டுப் பிரிந்து சென்றவர்களின்

உயிரான்மாக்களை விண் செலுத்தும் உணர்வை எடுக்கும் பொழுது, துரித நிலை கொண்டு விண் செலுத்தலாம். அவர்கள் உடலில் பெற்ற நஞ்சினைக் கரைக்கலாம்.

மெய்ஞானிகள் காண்பித்த அருள் வழியில், அருள்ஞான வித்தை உங்களிடத்தில் பதிவு செய்கின்றோம். அதை தியானித்து, உங்கள் உடலுக்குள் வளர்த்துக் கொள்ளுங்கள். மெய்ப்பொருள் காணும் அருள் சக்தியை உரமாக்குங்கள். உங்கள் உடலில் உள்ள அணுக்கள் அனைத்திற்கும் பெறச் செய்யுங்கள். மெய்வழி செல்லும் பாதையை அது வகுத்துக் கொடுக்கும். மெய்வழி வாழ்வோம். அருள்வழி வாழ்வோம்.



# 9 முன்னோர்களை விண் செலுத்தும் முறை

ஒரு நூலுக்கு வலு குறைவு. பல நூலை ஒன்றாகத் திரித்து, கயிறாக மாற்றும் பொழுது, அதனின் வலு கூடுகின்றது. இதைப் போன்று, நாம் அனைவரும் மகரிஷிகளின் அருள் உணர்வின் வலிமையை நமக்குள் ஏற்றிக் கொண்டு, நம்முடன் வாழ்ந்து, வளர்ந்து, உடலைவிட்டுப் பிரிந்து சென்ற முன்னோர்களின் உயிரான்மாக்களை, சப்தரிஷி மண்டலத்திற்கு உந்தித் தள்ளவேண்டும்.

அப்படியில்லாது, நாம் சப்தரிஷி மண்டலத்திற்குச் செல்வதற்கு, வேறு மார்க்கம் கிடையாது.

எவருக்கோ காசு கொடுத்து, முன்னோரை மோட்சத்திற்கு அனுப்புவேன் என்றால், அது முடியாது. நீங்கள்தான், உங்கள் உணர்வின் துணைகொண்டு, அருள்ஞானிகள் காண்பித்த அருள்வழி கொண்டு, மூதாதையர்களின் ஆத்மாக்களை விண்செலுத்த வேண்டும்.

ஒருவர் உங்களுடன் வாழ்ந்து, பின், உடலை விட்டுப் பிரிந்திருந்தால், 1 - லிருந்து 48 நாட்களுக்குள் அந்த ஆன்மாவைக் குறித்து, மகரிஷிகளின் அருள் உணர்வின் துணை கொண்டு, அந்த ஆன்மா சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று எண்ணி, தியானித்தல் வேண்டும்.

ஒரு இராக்கெட், உந்து விசையின் ஆற்றலால் விண்ணில் தன் எல்லையை அடைகின்றது. பின், அங்கிருந்து தான் கவரும் உணர்வுகளைத் தரை மார்க்கத்திற்கு அனுப்புகின்றது.

நட்சத்திரங்கள், விண்ணின் ஆற்றலைத் தனக்குள் கவர்ந்து, பெருக்கி, விஷத்தன்மை கொண்ட கதிரியக்கப் பொறிகளை உருவாக்கும், வல்லமை பெற்றது. இப்படி உருவாக்கப்பட்ட கதிரியக்கப் பொறிகள், மற்ற பொருள்களுடன் கலந்து, புவிக்கு வருகின்றது. இவைகளைத்தான் விஞ்ஞானி பிரிக்கின்றான், சக்தி வாய்ந்ததாக இணைத்து, இராக்கெட்டில் ஏவுகின்றான்.

உணர்வின் அதிர்வுகளில் இருக்கும் மின்னணுவின் கதிர்களை, தனியாகச் சேமிக்கின்றான். உணர்வின் அதிர்வுகளை அதற்குள் இணைக்கின்றான். எப்படி, மின்னல், ஒளியாக்கும் உணர்வுகளை பூமிக்கு

அழைத்து வருகின்றதோ, இதைப் போன்று, அது இயக்கும் தன்மை கொண்டு இங்கே ஈர்க்கப்பட்டு, அந்த உணர்வின் தன்மை கொண்டு, விண்ணின் ஆற்றலை அறிகின்றான் விஞ்ஞானி.

இதைப் போன்றுதான், நம்முடைய முன்னோரின் உயிரான்மாக்களை சப்தரிஷி மண்டலத்துடன் இணையச் செய்தல் வேண்டும். ஆனால், சாதாரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தால், போக முடியாது.

முதலில், உங்களிடத்தில் அருள் ஞானத்தின் நினைவாற்றலைப் பெருக்குதல் வேண்டும். அதனின் உணர்வாக, ஏங்கித் தியானிக்க வேண்டும்.

இதன் உணர்வின் வலுவின் துணைகொண்டு, நம்முடன் வாழ்ந்து, வளர்ந்து, உடலைவிட்டு பிரிந்து சென்ற உயிரான்மாக்களை, இன்னொரு உடலுக்குள் சென்றிருந்தாலும் பரவாயில்லை, நாம் தொடர்ந்து தியானிப்பதன் மூலம், அந்த உயிரான்மா இன்னொருவரின் உடலை விட்டு வந்தபின், விண் செலுத்தி, இன்னொரு உடல் பெறாத நிலைகளை உருவாக்கலாம்.

இன்றைய நிலைகளில், முன்னோர்கள் மூதாதையர்களின் உயிரான்மாக்களை விண் செலுத்தியபின், அதன் வழித் தொடர் கொண்டுதான், நாம் விண்ணின் ஆற்றலைப் பெறமுடியும்.

மூதாதையர்களின் உயிரான்மாக்களை விண் செலுத்திய பின், அதன் உணர்வின் துணை கொண்டு உங்கள் குடும்பத்தில் வரும் தீமைகளை அகற்றிவிட்டு, அருள் ஞானியின் உணர்வை உங்களுக்குள் துணை கொண்டால், உங்களை, அங்கே அழைத்துச் செல்கின்றது, உங்களுடைய உயிர்.

அருள் மகரிஷிகளின் அருள் உணர்வுகளை, யாம் உங்களுக்குள் பதிவு செய்ததன் நிலை கொண்டு, அருள் மகரிஷிகளின் அருளை எண்ணி, உங்களுடைய மூதாதையர்களின் உயிரான்மாக்களை சப்தரிஷி மண்டலத்துடன் இணையச் செய்யுங்கள், உடல் பெறும் உணர்வைக் கரையச் செய்யுங்கள்.

## 10 லேசர் (LASER) மூலம், இராக்கெட் விண் செல்லும். முன்னோர்களை, சப்தரிஷி மண்டல ஒளியலைகள் ஒளிப்படுத்தும்

பௌர்ணமி தியானத்தில், நாம் சரியான முறையில் தியானமிருந்தால்தான். நம் மூதாதையர்களுடைய உயிராத்மாக்களை, விண் செலுத்த முடியும். அவ்வாறு, விண் செலுத்துவதற்குண்டான பக்குவமான நிலைகளை, நாம் கூட்டுத் தியானங்களில் இருந்து பெறவேண்டும்.

இதற்கு முன்பு இறந்தவர்கள், அவர்கள் வேறு உடலிலே சென்றிருந்தாலும், அந்த உயிராத்மாவின் உணர்வுகள்தான் உங்கள் உடல். ஆக, இதை வளர்த்துக் கொண்டு, விண் செலுத்தும் நிலைகளைச் செயல்படுத்தும் பொழுது, உங்களுக்கு இரட்டிப்பு லாபம். உணர்ச்சியின் தன்மை கொண்டு, விண் செலுத்தும்போது, அங்கிருந்து பெற முடியும்.

இன்று கம்ப்யூட்டர் என்ற நிலைகளில், இயந்திரத்தை இங்கே வைத்து, லேசர் என்ற ஆயுதத்தைக் கொண்டு, அந்த ஒளிக்கதிரினுடைய ஒளிக்கற்றையினுடைய நிலைகள் கொண்டு, இன்று விண்ணிலே இராக்கெட்டை அனுப்புகின்றார்கள்.




அந்த இராக்கெட்டிற்குள் இருக்கக் கூடிய அலைவரிசை கொண்டு, எந்த உணர்வின் தன்மையை அங்கே பதியச் செய்து

வைத்திருக்கின்றார்களோ, அதன் வழியில் விண்ணிலே அதை மிதக்கச் செய்து, உணர்வின் அலையை ஆற்றல் மிக்க அலைவரிசை கொண்டு, இங்கே தரையிலிருந்தே எடுக்கின்றார்கள்.

மூதாதையர்களின் உணர்வுகள் எடையற்றது. ஆனால், உணர்வின் இயக்கம் உண்டு. நமக்குள் உணர்வின் இயக்கம் உண்டு. இயந்திரத்தைப் போன்று, இயக்கச் சக்தியும் நமக்குள் உண்டு.

அதற்குள் (உயிராத்மாவுக்குள்) இயங்கும் ஆற்றல்தான் உண்டு. இன்னொரு இயந்திரத்திற்குள் போனால்தான், அது வேலை செய்யும். ஆக, நாம் இந்த உணர்வின் அலையை மாற்ற முடியும்.

இதைப் போன்றுதான், நாம் ஒவ்வொருவரும் ஆற்றல்மிக்க சப்தரிஷி மண்டல ஒளிச் சக்தியை நமக்குள் பெருக்கி, இறந்தோர்களுடைய உயிராத்மாக்களை, விண் செலுத்திப் பழக வேண்டும்.

அதற்கு இந்த தியானம் இருக்க வேண்டும். நீங்கள் ஜெபமிருந்து எடுத்தாலும் அது பயனில்லை. விண்ணின் ஆற்றலை, மெய் ஒளியை நமக்குள் சேர்த்தால்தான், அதை மாற்ற முடியுமே தவிர, அது அல்லாதபடி செயல்படுத்த முடியாது.

# 11 முன்னோர்களை கங்கையில் கரைக்கச் சொன்னதின் உண்மைநிலை

இறந்தவர்கள் இன்னொரு உடலுக்குள் சென்றாலும், அவர்களையும் விண் செலுத்தலாம். இந்த தியானம் எடுத்துக்கொண்டவர்கள், அந்த உயிராத்மாவை எண்ணி சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று இந்த ஒளியின் தன்மையைக் கூட்டி, இந்த உணர்வின் தன்மையைக் எண்ணும் போது, நம் புலனறிவுக்கு வலு கொடுக்கின்றோம்.

இதன் வலு கொண்டு நாம் சரீர நிலைகளில் இருந்தாலும், அவர்கள் சூட்சும சரீரமாக இருக்கிறார்கள். நாம் ஆத்ம சுத்தி செய்து கொண்டு, இந்த ஆன்மாவின் நிலைகள், சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டுமென்று உணர்ச்சியுடன் உந்தி, நாம் மேலே தள்ளுகின்றோம்.

ரிஷிகளின் தன்மையோ, மெய் ஒளியின் தன்மையைத் தனக்குள் எடுத்து, இறந்தவர்களுடைய உணர்வுடன், ஏனென்றால் அவர்கள் செயலற்ற நிலைகளில் இருப்பவர்கள் ஜெபம் பண்ணவில்லை, உணர்வின் தன்மை பிரிந்திருந்தாலும், உணர்ச்சியின் தன்மை நம் உடலிலே இருக்கின்றது.

இந்த முறைப்படி தியானம் செய்து கொண்டவர்கள், அந்தக் குடும்ப சம்பந்தப்பட்ட உணர்வுகள் இருப்பதனால், இதை எடுத்துக் கொண்டவர்கள் இறந்தவர்களுடைய உயிராத்மாக்களுடைய நிலைகளை எண்ணி, அவை சப்தரிஷி மண்டலத்துடன் இணைந்திட வேண்டும் என்று எண்ணும் பொழுது, அது பந்து போலே உள்ளே தள்ளிவிடும்., விண் செலுத்தலாம்.



இல்லையென்றால், புவியின் ஈர்ப்புக்குள்தான் நிற்கும். இப்படி நாம் விண் செலுத்தினால், எப்படி மனிதனாகப் பிறந்து ஒளியாக மாற்றி, இன்று சப்தரிஷி மண்டலத்தில் இருக்கின்றார்களோ, அந்த சப்தரிஷி மண்டல அலைகளுடன் நாம் கலக்கலாம்.

அவ்வாறு கலக்கச் செய்தபின், நாம் எப்படி சாம்பலைக் கொண்டு போய்க் கங்கையிலே கலந்தால், கங்கை, கடலில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும் என்பார்கள்.

நாம் ஒரு குடும்பத்தில் இருப்போர் அனைவருமே, இந்த தியானத்தினுடைய ஒளி அலைகளை, எல்லோரும் சேர்ந்து எடுத்து, இந்த உணர்வின் தன்மை கொண்டு அவர்களை எண்ணி, உயிராத்மாவை விண் செலுத்தும்போது, இது கங்கை.

அதைக் கொண்டு போய், பெருங்கடலான ஒளிக் கடலில் நாம் சேர்க்கின்றோம். அந்த ஒளிக் கடலில் நாம் சேர்க்கும் பொழுதுதான், இன்னொரு உடல் பெறும் நிலையை, மெய் ஒளியான சப்தரிஷி மண்டலத்துடன் கலந்தவுடன், அது பஸ்பமாக, ஜீவனுள்ள ஒளிச் சரீரம் பெறுகின்றது.

உயிர் எப்படி ஒளியாகத் தோன்றியதோ, இந்த உணர்வின் அலைகள் பிரிக்கப்பட்டு, அந்த உணர்வின் நிலையாகின்றது. சப்தரிஷி மண்டல ஈர்ப்பு வட்டத்திற்குள் சென்றவுடன், அவர்கள் சமைத்த உயர்ந்த ஒளியின் உணர்வுகள், அதை ஈர்த்து அவர்கள் வளர்ச்சி பெறும் தன்மை பெறுகின்றார்கள்.

ஆக இந்த ஒளிச் சரீரம் பெறும் பொழுது, எந்த உணர்வின் தன்மையை அவர்கள் வளர்த்துக் கொண்டார்களோ, அந்த உணர்வின் சரீரம் நமக்குள் உண்டு. இவ்வாறு நாம் செய்து, உந்தித் தள்ளுவோமேயானால், சுலபத்திலே நாம் விண்ணை நோக்கி எண்ணும் பொழுது, அந்த விண்ணின் சப்தரிஷி மண்டல அலைகளை, நாம் சுலபமாகப் பெற முடியும்.

ஆக, சுலபமாகப் பெற்று, அந்த எண்ண ஓட்டத்தில் விட்டவுடன், நம்மைச் சேர்ந்தவர்கள் இறந்துவிட்டால், நாம் கூட்டுத் தியானம் செய்கின்றோம். இவ்வாறு செய்து, ஒவ்வொருவருடைய நிலைகள், நாம் பாசத்தால் வளர்த்துக் கொண்ட நிலைகள் கொண்டு, அந்த இறந்தோர்

வீட்டிலே நாம் அனைவரும் சேர்ந்து, கூட்டு ஐக்கிய தியானம் இருந்து, அந்த உயிராத்மாக்கள், சப்தரிஷி மண்டலங்களுடன் இணைய வேண்டும் என்று, அந்தக் குடும்பத்தாருடன் சேர்ந்து இணைத்து, நாம் இதைச் சொல்லுவோமேயானால், இந்த உணர்வுகள் பெரும் நதியாகின்றது. அப்பொழுது, அந்த உயிராத்மாவை நாம் உந்தித்தள்ளி, உயிராத்மாவைப் புனிதம் பெறச் செய்யலாம். இப்படித்தான், அன்று மெய்ஞானிகள் அதைச் செய்தார்கள்.



# 12 முன்னோர்களின் சாபங்களை நீக்கும் நிலை

நம் மூதாதையர்களுடைய எண்ணங்களில், முன்பு சாபமிட்ட உணர்வுகள் கொண்ட சில குடும்பங்களில், ரொம்ப நலிந்து குடும்பப் பாசத்துடன் யாராவது இருந்தால், அந்த உணர்வின் தன்மை இதற்கு முன்னாடி, நான்கு தலைமுறைக்கு முன்னால், ஒருவருக்கொருவர் போரிட்டு, சாபமிட்டு, நான் எப்படி மூச்சுத் திணறி, என் குடும்பம் சின்னாபின்னமாச்சோ அதேமாதிரி, உன் குடும்பமே இப்படி ஆகும் என்று தன்னையறியாமலே சாபமிட்டிருந்தால், அந்த உணர்வுகள், நம் குடி வழி, இன்று நாம் தவறு செய்யவில்லை என்றாலும்கூட, இந்த உடலுக்குள் அது புகுந்து, ஆஸ்துமா போன்ற நோய்கள் அதிகமாக வந்துவிடும்.

இதைப் போன்ற நிலையில் உள்ளது அனைத்துமே, எப்படி நம் உடலுக்குள் வந்து சேருகின்றதோ, இதைப் போன்றுதான் மெய் ஞானிகளுடைய அருள் சக்திகளை, நாம் கூட்டுக் குடும்ப தியானம் செய்து, வாரத்தில் ஒரு நாள் இந்த உயிராத்மாவை சப்தரிஷி மண்டலத்துடன் இணைக்க வேண்டும்,

இவ்வாறு, நம் மூதாதையர்களைச் சொல்லி விண் செலுத்தினால், அப்போது, சப்தரிஷி மண்டலங்களிலிருந்து வரக்கூடிய ஒளி அலைகளுடன் பட்டவுடனே, மனிதன் இன்னொரு உடல் பெறும் நிலையைத் தீண்டிக்கருகி, ஆனால், உணர்வின் தன்மை கொண்டு இயக்கக்கூடிய நிலைகள்,

இப்பொழுது, நாம் எப்படி ஒளிச்சரீரம் பெற, இந்தச் சரீரத்திற்குள் இருந்து எண்ணுகின்றோமோ, இதைப்போல சப்தரிஷி மண்டலங்காலிருந்து வரக்கூடிய, அவர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளை இவர்கள் சுவாசித்து, ஒளிச்சரீரம் பெறும் தகுதி பெறுகின்றார்கள்.

அப்பொழுது, நாம் எண்ணும்போதெல்லாம் சப்தரிஷி மண்டலங்களிலிருந்து, சுலபமான நிலைகளிலிருந்து, பல சக்திகளை நாம் பெறமுடிகின்றது. அவ்வாறு நாம் பெற்றால், இந்த வாழ்க்கையில் வரக்கூடிய துன்பங்களை நீக்கி, நாம் இந்த உடலைவிட்டுச் சென்றால், நாம் சப்தரிஷி மண்டலுத்துடன் இணையலாம். இதுதான் அன்று மகரிஷிகள் காட்டிய நிலைகள்.

ஆகையினாலே, இன்று மனிதனாகப் பிறந்த நாம், இந்த உணர்வின் ஆற்றலை நாம் பெருக்குவதற்கு, ஒவ்வொரு நிமிடமும் மூதாதையர்களை விண் செலுத்திவிட்டு, நாம் இந்தக் கூட்டுக் குடும்ம்ப தியானங்களிலே, மகரிஷிகளின் அருள் சக்தியைப் பெற்று, நம் உடலில் வரக்கூடிய விஷத்தன்மையை நீக்கி, அந்த ஒளித்தன்மையைப் பெறுவதற்குண்டான நிலைகளை, நாம் மேற்கொள்ள வேண்டும்.

# 13 உடலில் உள்ள ஆன்மாக்களை ஒளிப்படுத்தும் நிலை

நாள் முழுவதற்கும், நாம் உடலிலே உழைக்கின்றோம். ஒரு பத்து நிமிஷம் நாம் “மகரிஷிகளின் அருள் சக்தியை நாம் பெற வேண்டும்”, “எங்கள் ஜீவாத்மா பெற வேண்டும்” என்று ஆத்மசுத்தி செய்து நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

நம் வாழ்க்கையில், நம்மையறியாமல் நாம் தவறு செய்யாமலே, நம்முள் புகுந்து பல எண்ணங்களைத் திசைத்திருப்பும், அல்லது பிறிதொரு ஆத்மா நம் உடலுக்குள் வந்து, நம்மை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும், அல்லது பாசத்தாலே ஒருவருக்கு நன்மை செய்தாலும், அந்தப் பாசத்தின் உணர்வு கொண்டு, ஒரு ஆத்மா தனக்குள் வந்து, துன்பங்களை விளையவைத்தாலும், நாம் இந்த தியானத்தின் நிலைகள் கொண்டு, நாம் செய்த நன்மையின் தன்மையைக் காக்கவும் முடியும்.

அதே சமயம், அந்த உயிராத்மாக்களை விண் செலுத்த வேண்டும். அவ்வாறு விண் செலுத்தி விட்டால், பாசத்துடன் இருக்கக்கூடிய நிலைகள், நம் உடலிலே இருந்தாலும், அந்த இரு உணர்வின் தன்மை, நம் உடலுக்குள் ஆற்றல் மிக்கதாக மாறும்.

அவ்வாறு ஆற்றல் மிக்கதாக மாறி, நாம் அந்த சப்தரிஷி மண்டலங்களை எண்ணினோம் என்றால், அந்த இரு சக்தியினுடைய துணை இருப்பதனாலே, விண்ணிலிருந்து பல ஆற்றல்களை நாம் பெற்று, அதற்கு ஒரு மோட்சத்தை கொடுக்கலாம்.

நாம் செய்த இந்த நன்மையின் தன்மையை, நம் உடலில் பல பிணிகள் இருந்தாலும், அதை மாற்றியமைத்து, மனிதன் என்ற தன் நிலைகள் பெறலாம்.

இதைக்காட்டிலும், இதைப்போல நாம் எடுத்துப் பழகிக்கொண்டால், விஞ்க்ஞானத்தில் வந்த இந்தப் பேரழிவான நச்சுத்தன்மை, காற்றிலே மிதந்து கொண்டிருப்பதல் இருந்து, நம்மைக் காக்க முடியும்.

# 14 பௌர்ணமி தியானத்தின் முக்கியத்துவம்

இந்த பௌர்ணமி தியானம் மிகவும் முக்கியம். இதை ஏன் சொல்லுகின்றோம் என்றால் நாம் எங்கிருந்தாலும் நம்முடைய எண்ண அலைகள் விண்ணை நோக்கிக் குவிகின்றது. அப்படி குவிக்கப்படும் பொழுது, மனித உடலில் இருந்து ஒளியின் உணர்வுகளைப் பெற்று, நமது குருநாதர் ஆரம்பத்தில் விண் சென்ற உணர்வுகளைப் பெற முடிகின்றது. அந்த ஒளியின் உடலிலிருந்து வந்த, ஒளி அலை நம் பூமியில் படரப்பட்டு, அந்த உணர்ச்சிகள் தூண்டி, மீண்டும் இங்கே எழுகின்றது.

எழுந்த நிலைகளில், அந்த வித்தின் சத்துதான் எனக்கும் அது கிடைத்தது. எமது குருநாதர், அருள் வழி கொண்டு எமக்கு அவர் கொடுத்த வித்தினை, அவர் காட்டிய வழிகளில் வளர்த்து, அதை உங்களுக்குள்ளும் பல வித்தாக விளையச் செய்வது.

ஒரு நெல் பசியைப் போக்காது. பல நெல்கள் ஒன்று சேர்ந்து, ஆக்கப் பணிகளுக்கு பயன்பட்டு, அதை எப்படி உணவாக உட்கொள்கின்றோமோ, அதைப் போன்று, நாமெல்லம் இந்த நிலைகளைச் செய்தால், துரித நிலைகளில் பெறலாம்.

பல ஆண்டுகள் நான் தனித்துச் செய்தாலும், அந்த உணர்வின் தன்மையைப் பல ஆயிரமாகச் சத்து சேர்ப்பது, மிகக் கடினம். நாம் எல்லோரும் சேர்ந்து, மெய் ஒளியின் தன்மையை நம் குருநாதர் காட்டிய நிலைகளில், ஒவ்வொரு உடலிலும் சேர்த்து, துன்பத்தை நீக்கி இன்பத்தின் நிலைகள் பெறுவதற்கு, ஆத்ம சுத்தி வழி கொண்டு, அந்த மெய்ஞானியின் அருள் ஒளியை நமக்குள் சேர்க்கும் பொழுது, உங்களுக்குள்ளும் அந்த சத்து விளைகின்றது.

நமக்குள் ஒருவருக்கொருவர் கலந்து, அந்த உணர்வின் தன்மையை ஒளியாக மாற்றிச் சென்றால்தான் முடியுமே தவிர, தனியே ஒருவர் செல்ல முடியாது.

நாம் அனைத்தும் ஒன்று சேர்க்கும் பொழுது, எவர் ஒன்றுகின்றனரோ அவர் பலன் பெறுகின்றார். நாம் இந்த வழிகளில், நமக்குள் உறுதுணையான நிலைகளை ஏற்படுத்திக் கொண்டால்தான், நாம் உருப்பெற முடியும்.

இந்தக் கூட்டு தியானங்களில், உங்கள் ஒவ்வொருவரையும் ஐக்கியப்படுத்தி, பௌர்ணமி தியானங்களில் எண்ணங்களைக் குவிக்கச் செய்து, நாம் நண்பர்கள் என்ற நிலைகளில் சென்றாலும், இந்த உயிராத்மா இந்த உடலை விட்டுச் செல்லும்பொழுது, சப்தரிஷி மண்டலங்களில் உயிராத்மாவை உந்தித்தள்ள வேண்டும்.

எந்தக் குடும்பத்திலிருந்து அந்த உயிராத்மா செல்லுகின்றதோ, அந்தக் குடும்பத்தார் மெய் ஒளியைப் பெறுவது, சுலபமாகின்றது.

நமது குருநாதர் காட்டிய முறைப்படி, பௌர்ணமி தியானமிருக்கும், அனைத்து ஆத்ம ஐக்கிய அன்பர்களின் எண்ணங்களையெல்லாம், ஒன்று சேர்த்துக் குவித்து, ஒரு இலட்சம் பேர் தியானிக்கின்றோம் என்றால், தியானித்த ஒவ்வொருவருக்கும், அந்த ஒரு இலட்சம் பேருடைய சக்தி கிடைக்கின்றது. அச்சமயம், நமக்கு சக்தி, அதீத நிலைகளில் கூடுகிறது.

நமது குருநாதர் காட்டிய முறைப்படி, நீங்கள் அனைவரும் தியானமிருக்கும் பொழுது, யாம் (ஞானகுரு) அச்சமயம் தியானமிருக்கிறோம். அந்த நேரத்தில் உங்களுக்கு சக்தி கூட, நமது குருநாதர் காட்டிய நெறிப்படி, உங்கள் உயிராத்மாவைப் பிரார்த்தித்து, அந்த சக்தியை நீங்கள் பெற, எம்மால் உதவ முடிகின்றது.

ஆகவே, பௌர்ணமி தியானத்திலே உங்களுக்கு இந்த சக்தி கூட, யாம் உதவுவதால், அந்த நேரத்தை விரயம் செய்யாது, நீங்கள் தியானமிருந்து பயனடையுங்கள். இந்த பௌர்ணமி தியானத்திலே, உங்களுக்கு வாழ்க்கையில், வழியறிந்து செயல்பட ஞானம் கிடைக்கின்றது. துருவ நட்சத்திரத்தின் பேரருளும் பேரொளியும் பெறுவதால், நமது உயிராத்மாவில், ஒளி பெறும் அணுக்களும் வளர்கின்றன.

நம் முன்னோர்கள், மூதாதையர்களின், உடலை விட்டுப் பிரிந்து சென்ற உயிராத்மாக்கள், ஒளி சரீரம் பெற உதவுகின்றோம். அதே சமயம், சப்தரிஷி மண்டலங்களின் பேரருளையும் பேரொளியையும், நாம் பெறும் தகுதி பெறுகின்றோம்.

# 15 நம் உணர்வுகள் விண்ணை எட்டும் வழி

பிறர் எண்ணம் நம்மை இயக்காவண்ணம், ஒளியின் சிகரமாக மாற்றிய அந்த மெய்ஞானிகளின் ஆற்றல் உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், திரும்பத் திரும்பச் சொல்லி, இந்த உணர்வின் ஆற்றலை, உங்களுக்குள் பதிய வேண்டி உபதேசிப்பது. ஆக, மகரிஷிகளின் அருள் ஆற்றல்மிக்க இந்த நிலையை, நீங்கள் பூரணமாக அடைவதே மெய்.

ஆகவே, இதைப் பருகும் பாதை, ஒரே பாதைதான். நமது குருநாதர் காட்டிய அருள் வழி கொண்டு தியானிப்போம். உங்களுடன் வாழ்ந்து வளர்ந்த அன்னை தந்தையோ, தாத்தா பாட்டியோ, அத்தனை பேரும் நாம் மக்களாகப் பிறந்தபின், குழந்தைகளை வளர்க்க வேண்டுமே என்ற எண்ணம் கொண்டு, குழந்தைகள் உயர்ந்த நிலைகளில் இருக்க வேண்டுமென்று பல வேதனைகளை அனுபவித்து, அதனால், நோயாகி சாகப் போகும் பொழுது, "அய்யோ, இவ்வளவு சம்பாதித்து வைத்திருக்கின்றேனே?", "என்ன பண்ணப் போகின்றானோ?" என்ற வேதனை கொண்டு, யார் மேல் அந்த ஏக்கத்தைக் கொண்டார்களோ, அந்த வேதனையை உருவாக்கிக் கொண்டு, உடலை விட்டுப் போன போன பின்பு, யார் மேல் எண்ணம் கொண்டார்களோ, அவர்கள் உடலிலே இந்த ஆன்மாக்கள் போய்விடும்.

மீண்டும், இந்த பூமியின் ஈர்ப்புக்குள் சென்று, நாம் எடுத்துக் கொண்ட நிலையை அங்கே மறைக்கச் செய்து, இந்த மனித உடலுக்குள்ளேயே, "சாகாக்கலை" என்ற நிலையில் இங்கே வந்துவிடுகின்றோம். விஷம் சாவதே இல்லை, எதிலேயும் கலந்து, அது வளர்ந்து கொண்டேதான் இருக்கும்.

ஒவ்வொன்றிலும் "வேகாக்கலை" என்ற நிலையைப் பெற, ஒவ்வொரு நிமிடமும், மகரிஷிகளின் அருள் சக்தியை நமக்குள் சேர்த்து, நம்முடன் வாழ்ந்து வளர்ந்து உடலைவிட்டுப் பிரிந்து சென்ற, அந்த முன்னோர்களின் உயிரான்மாக்களை, விண் உலகமான சப்தரிஷி மண்டல ஒளி அலைகளுடன், கலக்கச் செய்ய வேண்டும்.

இன்று விஞ்ஞான அறிவு கொண்டு, ஒரு இயந்திரத்தை உருவாக்கி, அதே சமயத்தில், விண்ணிலே இராக்கெட்டை உந்தி ஏவுகின்றனர். அந்த விண்வெளியின் உணர்வின் தன்மைதான், நமக்குள் எடுத்து சக்திவாய்ந்த

எண்ணங்களாக மாறி, நாம் அந்த உணர்வின் வலுக் கொண்டு, நம்முடன் வாழ்ந்து வளர்ந்த இந்த உயிரான்மாக்களை, இராக்கெட்டை ஏவுவது போல, அந்த உணர்வின் தன்மை கொண்டு, விண் செலுத்த வேண்டும்.

இன்று, இராக்கெட்டை ஏவியபின், “ஆண்டெனா” T.Vக்களில் சாதாரணமாக வைத்துள்ளார்கள். இராக்கெட்டில் செலுத்திய, "இயந்திரத்தில் பதிவு செய்து", அங்கே ஏவிய அந்த உணர்வுகள், மற்ற கோள்களின் நிலைகளை உணர்ந்து, கவர்ந்து கொண்டாலும், இயந்திரத்திற்குள் அது, பதிவு செய்கின்றது.

அது அலைகளை ஒளிபரப்புச் செய்யும் பொழுது, தரையில் இருக்கும் இயந்திரத்திற்குள், “ஆண்டெனா பவர்” வெகு தொலைவில் இருப்பதை, அது கவர்ந்து, உணர்ந்து, இங்கே தரையில் இருக்கக் கூடிய இயந்திரத்திற்குள் பாய்ச்சியபின், மனிதன் விஞ்ஞான அறிவால், தான் கணக்கிட்ட வழிப்படி அவன் எடுத்து, விண்ணின் ஆற்றலை அறிகின்றான்.

நம்மை உருவாக்கிய முன்னோர்கள், எத்தனையோ வேதனைகள் எடுத்து, அந்த உடல்கள் அழுகினாலும், அவர்கள் உடலுக்குள் நம்மைக் காத்திடும் உணர்வுகள் உண்டு.

நாம் மெய்ஞானிகளின் உணர்வுகளை நமக்குள் வளர்த்து, நாம் இதைப் போல உணர்வின் நிலை வலுக்கொண்டு, நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, அந்த ஞானிகளின் உணர்வின் வலுக்கொண்டு, உடலை விட்டுப் பிரிந்து சென்ற நம் முன்னோர்களின் உயிராத்மாக்கள், "சப்தரிஷி மண்டலங்களுடன் இணைய வேண்டும்", என்று சக்தி வாய்ந்த எண்ணத்தைக் கொண்டு, உந்தித் தள்ளுவதே பௌர்ணமி தியானம்.

அவ்வாறு உந்தித் தள்ளியபின், உங்களுடன் வாழ்ந்து வளர்ந்து, உங்களைக் காத்திட்ட நல்ல உணர்வுகள், அங்கே விண்ணிலே சென்றபின், இன்னொரு உடலாகப் பெறும் உணர்வுகள், நஞ்சினை வென்ற மகரிஷிகளின் அருள் வட்டத்திற்குள் சென்றவுடனே, அது பஸ்பமாகி, அந்த ஒளிக் கடலிலே, ஒளிச் சரீரமாக மாறிவிடுகின்றது.

அவ்வாறு நம் முன்னோர்கள் அங்கே ஒளியின் சரீரமாக ஆனபின், இங்கு உடலிலே இருக்கும் நாம், மீண்டும் அங்கே விண்ணை நோக்கி எண்ணங்களைச் செலுத்தும் பொழுது, நம் நினைவின் அலைகளுக்கு,

கண்களின் உணர்வுகளுக்கு, சக்திவாய்ந்த ஆண்டெனா பவர் கிடைக்கின்றது.




இதைப் பல ஆயிரம் பேர் கூடி, உணர்வின் தன்மை பெறவேண்டும் என்று நாம் கூட்டுத் தியானங்களில் ஒருங்கிணைந்து, இந்த எண்ணங்களை ஒலிபரப்புச் செய்யும் பொழுது, சூரியனின் காந்த சக்தியால் கவர்ந்து, அந்த உணர்வின், சக்தி வாய்ந்த நிலைகள், அணுவின் ஆற்றலாக பெருகுகின்றது.

உதாரணமாக, பாடகர் ஒருவர் இருக்கின்றார். அவர் பாடல்கள் பாடும் பொழுது, பக்க வாத்தியங்கள் இசைக்கின்றனர். இவையனைத்தும் ஒருங்கிணைந்து சேர்ந்து, அந்த உணர்வின் ஒருங்கிணைந்த ஆற்றல், அது சூரியனின் காந்த சக்தி கவருகின்றது. அதை நுகர்ந்து, நம் செவிப்புலனில் தாக்கப்படும் பொழுது, அங்கு ஒலிபரப்பாகும் உணர்வின் நிலைகள், நமக்குள் மகிழ்ச்சியூட்டும் நிலைகளாக, இயங்குகின்றது.

இதைப் போலத்தான், அந்த மெய்ஞானியின் உணர்வின் சக்தியைத் தூண்டச் செய்யும் பொழுது, இந்த உணர்வின் தன்மை, புலனறிவால் கண்ணின் நினைவலைகளுக்கு அது ஓட்டச் செய்து, விண்ணுலகம், உங்கள் நினைவுகளுக்கு எட்டச் செய்வது. ஆனால், அவர்களை உந்தித் தள்ளியபின், அவர்களுடைய உணர்வுகளே, நாம். இதே நினைவினை, விண்ணை நோக்கிச் செலுத்தும் பொழுது, அந்த உணர்வின் ஆற்றலை நாம் நுகர நேருகின்றது.

அந்த உணர்வின் தன்மை, நமக்குள் நினைவலைகளால் இயக்கும் பொழுது, இந்த பூமியிலே வாழ்ந்த அந்த மகரிஷிகள், அவர்கள் உடலிலே

தீமையை விலக்கிடும் உணர்வுகள் விளைந்து, இந்த உணர்வுகளை சூரியனின் காந்த சக்தி கவர்ந்திருப்பதால், இங்கு படர்ந்திருப்பதையெல்லாம், நாம் நுகரும் தன்மை வருகின்றது.

அந்த மகரிஷிகள் அவர்கள் வாழ்க்கையில் நஞ்சினை வென்ற நிலைகளும், வாழ்க்கையைச் சீராக ஓட்டிய நிலைகளும், இந்த உணர்வுக்குள் வந்தபின், அந்த ஆற்றல்மிக்க சக்தியை நாம் நுகர நேருகின்றது. அதன்வழி நாம் விண் செல்வது எளிதாகின்றது. எமது அருளாசிகள்.

# 16 சப்தரிஷி மண்டல காந்த அலைத் தொடர்பு

மூதாதையர்களுடைய உணர்வின் அலைகளின், தொடர்பு கொண்டவர்கள் நாம். அவர்கள் இறந்தபின், அந்த உயிராத்மாவில் அந்த உணர்வின் அலைகள் உண்டு. ஆனால், அந்த உணர்வின் மணங்களேதான் உண்டே தவிர, அதன் செயலாக்கம் இல்லை.

இன்னொரு சரீரத்திற்குள் பட்டால்தான் அது இயங்கும். ஏனென்றால், அவர்கள் எடுத்துக் கொண்ட உணர்வு, இன்னொரு மனித உடலுக்குள் போனால், அங்கேயும் துன்பத்தை உண்டாக்கும். அதன் வழி அங்கே இயக்கும். ஆனால், அதிலிருந்து விஷத்தன்மைகள் மாறி, மீண்டும் வேறொரு சரீரங்கள்தான் பெற முடியும். அந்த உணர்வுக்குத் தக்கவாறு, உடல் பெற்று விடுகின்றனர்.

இதைப் போன்ற உயிராத்மாக்களை, நாம் சரீரத்திலிருந்து ஜெபமெடுத்தவர்கள், இவ்வாறு தியானித்தவர்கள் அனைவருமே "இறந்தவர்களுடைய உயிராத்மா சப்தரிஷி மண்டலத்துடன் இணைந்து அவர்கள் ஒளி சரீரம் பெறவேண்டுமென்று" நாம் சொல்லும்போது, அந்த உயிராத்மா சப்தரிஷி மண்டலத்துடன் இணைந்துவிடுகின்றது. ஆக, இன்னோரு உடல் பெறும் நிலைகள், அங்கே கருகிவிடுகின்றது. இன்னொரு சரீரம் பெறும் உணர்வுக்குள், அது இயக்கி, ஒளி நிலை பெறுகின்றது.

ஆக, அந்த உயிராத்மாக்கள் ஒளிநிலை பெற்று, அங்கே சப்தரிஷி மண்டலத்திலிருந்து வரக்கூடிய, ஆற்றல் மிக்க சக்தியை அது சுவாசித்து, அந்த உணர்வின் நிலைகளில் அது ஒளிச் சரீரமாக வளர்கின்றது.

இன்று இராக்கெட்டை விண்ணிலே ஏவி, அதன் அலைவரிசையில், தரையிலிருந்து அந்தச் செய்திகளை அறிந்து, அந்த உண்மைகளை அறிவது போன்று, அந்த உயிராத்மாக்கள் அங்கே வளர, நாம் அடிக்கடி எண்ணும்போது, அந்த உணர்வின் சக்தியை நாமும் பெறுகின்றோம்.

ஆக, இதை நாம் முறைப்படி செய்தால், நாம் இந்த பூமியின் நிலையை விட்டு, அடுத்து நாம் இந்த சரீரத்தை விட்டுச் சென்றபின், அவர்கள் உணர்வலைகளுடன் தொடர்பு கொண்டு, அந்தக் காந்த அலைகள்,

முன் சென்றிருக்கின்றது. நம் உணர்வின் நிலைகளில் இந்தப் புவியின் நிலைகளிலே, தொடர்பு கொள்ளும். மறந்து விடவேண்டாம்.

இப்பொழுது, நாம் எப்படி ஒருவருக்கொருவர் வெறுப்பான நிலைகளில் எண்ணி இறந்தவுடன், அவர் உடலுக்குள் போய்ச் சேர்ந்து, அவரைத் துன்புறுத்துகின்றோம். அதே உணர்வை, அங்கே பெருக்குகின்றோம்.

ஆக, இந்த உயிராத்மாவுக்குச் செயலில்லை. அந்த உணர்வுக்குள் அந்த மணத்தின் தன்மை கொண்டுதான், ஈர்ப்பின் சக்தி அங்கே போய்ச் செயல்படுவது.

ஆக இந்த உடலில் இருக்கும்போது, ஆற்றல் மிக்க சக்தியை நாம் இந்த வழிமுறைப்படி, நம் உயிராத்மாவுக்குள் செலுத்தி, நாம் விண்ணை நோக்கி நம் எண்ணங்களைச் செலுத்தி மூதாதையர்களை செலுத்தச் செய்து, அந்த உணர்வின் எண்ணங்களை, அங்கே சுழலவிடவேண்டும்.

இந்த உடலைவிட்டு இந்த உயிராத்மா சென்றபின், அந்த உணர்வுடன் நாம் ஒளியாக பெறவேண்டும். அதை, நாம் இப்போதிருந்தே பழகிக் கொள்ள வேண்டும்.

தாய் தந்தை மூதாதையர்களின் உயிராத்மாக்களை விண் செலுத்தினால், அந்த உயிராத்மா விண்ணிலே இருக்கும்போது, நம் உடல் இங்கிருந்தாலும், நம் மேலே இருக்கக்கூடிய, இந்தப் பாசம் விண்ணிலே இருக்கக்கூடிய நிலைகளை, நாம் பெறமுடியும்.

நாம் இப்போதிருந்தே செய்து கொண்டால்தான், நாம் உடலை விட்டுச் சென்றபின், தாயின் ஈர்ப்பின் அணைப்பிலே, ஒளியின் சரீரமாக அங்கே போய்ச் சேருவோம்.

அம்மா அப்பா, சொத்து கொடுத்தார்கள், நன்றாக இருக்கிறோம் என்போம். அதன்பின், ஏதாவது சொன்னால், எவ்வளவு ஏசுகிறோம். எத்தனை பேசுகிறோம், எப்படா தொலைந்து போகும், என்று எண்ணுவோம்.

செத்தபின், நல்ல ஆடம்பரமாகச் செய்வோம். ஊர், புகழுக்காக வேண்டி எல்லாத்தையும் செய்வோம். அம்மா அப்பாவை மட்டும் உதைப்போம், திட்டுவோம், எனக்கு என்ன சொத்து வைத்திருக்கின்றாய்?

என்று கேட்போம். இதைத்தான், நாம் பேசக் கற்றுக் கொண்டுள்ளோம். ஏனென்றால், நாமும் அப்படி, நமக்கு முன்பும் அப்படித்தான்,

நம்மையறியாமலேயே, எல்லாம் தெய்வம் செய்யும்! சாமி செய்யும்! சாமியார் செய்யும்! ஜோசியம் செய்யும்! யாகம் செய்யும்! இயந்திரம் செய்யும்! மந்திரம் செய்யும்! என்ற எண்ணத்திலே செய்கிறோம்.

ஏதாவது குறை வந்துவிட்டால், இப்படித்தான் செய்கின்றோமே தவிர, நம் உயிரைக் கடவுளாக மதித்து, நாம் எண்ணிய உணர்வுகளை ஆற்றல் மிக்க உணர்வின் சக்தியாக வளர்த்து, நம் சொல்லுக்குள் அந்த செயலாக வேண்டும், என்று மெய்ஞானிகள் காட்டிய நிலையை, யாரும் பின்பற்றவில்லை.

அந்த மெய்ஞானிகள் காட்டிய அருள்வழிப்படி, மெய்ஞானிகள் உணர்த்திய ஆற்றல்கள் காற்றிலே உண்டு. நீங்கள் சுவாசித்து எடுக்க முடியும், என்று ஞானியர்கள் காட்டியிருந்தாலும், காலத்தால் அவை அனைத்தும் மறைக்கப்பட்டுவிட்டது. மறைந்தாலும், இன்று நினைவுபடுத்தி எடுக்கச் சொன்னால், எங்களுக்கு நேரமில்லை என்று சொல்கிறீர்கள், இதுதான் இன்று நாம் சொல்லும் நேரம்.

ஏனென்றால், விஞ்ஞான அறிவின் நிலைகள் கொண்டு, துரித நிலைகளுக்கு கொண்டு வரப்படும்போது, யாராவது அதிகமாகச் சொன்னால், “விஞ்ஞானத்தில் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்” என்கிறார்கள். சிலர்.

ஏட்டிலே படித்துக் கொள்வோம். அதை மனதிலே இருத்திக் கொள்வோம். எண்ணங்களைச் சிதற விடுவோம். மெய்ப்பொருளை நாம் அறிய மாட்டோம். ஆனால், அதை வியாக்யானப்படுத்துவோம். உட்பொருளை நினைவில் கொண்டு, சுவாசிக்கும் நிலையை இழந்து விடுவோம். இவைகள்தான், இன்றைய பாடநிலைகளின் தன்மைகள்.

இதைப் போன்ற நிலைகளிலிருந்தெல்லாம், நம்மை மீட்டுக் கொள்வதற்கு, உங்களை நீங்கள் நம்புங்கள். உங்கள் உயிரை ஈசனாகக் கருதுங்கள். நீங்கள் எண்ணும் உணர்வுகள் அனைத்தையுமே, பிரம்மமாக சிருஷ்டித்துவிடுகின்றது, உங்கள் உயிர்.

தியானவழி அன்பர்கள் அனைவரும், நமது குருநாதர் அருளால் எல்லா மகரிஷிகளின் அருள் சக்தியைப் பெற்று, இந்த பிறவியில்,

பிறவியில்லா நிலை என்னும் "அழியா ஒளிச் சரீரம்" பெற எமது அருளாசிகள்.



# 17 விண் செல்லும் முன்னோர்களுக்கு ஆகாரம்

நாம் ஒவ்வொரு நிமிடமும் ஆத்மசுத்தி செய்து, நம் உடலிலே வரக்கூடிய பிணிகளை நீக்கி, மனக்கவலையை நீக்கி, நாம் எடுத்துக் கொண்ட உணர்வின் தன்மையை, உயிராத்மாவில் சேர்த்து, ஒவ்வொரு நிமிடமும் நம்முடைய எண்ணம், அந்த சப்தரிஷி மண்டலங்களோடு தொடர்பு கொண்டு இருக்கும்போது, இந்த உடலைவிட்டு நம் உயிராத்மா வெளியே சென்றபின், நாம் எப்படி ஒரு ஐக்கியக் கூட்டுடன், அனைவருமே அந்த சப்தரிஷி மண்டலங்களின் ஒளி காந்த சக்தியைப் பெற வேண்டுமென்று ஏங்குகின்றோமோ, அதைப்போல, அந்த ஆத்மாவினுடைய நிலைகள் அங்கே பதிவாகியிருக்கின்றது.

அப்படி இறந்தவர்களுடைய உயிராத்மாக்களை, வாரத்தில் ஒருநாள் கூட்டுக் குடும்ப தியானங்கள் இருந்து, பழகிக் கொண்டவர்கள், அந்த உணர்வுடன் சேர்த்து, அந்த உயிராத்மா சப்தரிஷி மண்டலத்தில் இணைய வேண்டுமென்று நாம் எண்ணும்போது, அந்த ஒளிகளுடன் விண் செலுத்த முடியும். அவ்வாறு விண் செலுத்திவிட்டால், அந்த சப்தரிஷி மண்டலங்களிலிருந்து, இருக்கக்கூடிய ஒளியின் உணர்வலைகள், நாம் அனுப்பும் உயிராத்மாவுக்கு ஆகாரமாகின்றது.

"எல்லா மகரிஷிகளின் அருள் சக்தி நாங்கள் பெற வேண்டும்" என்று ஏங்கி இருங்கள். இதை நீங்கள் பெறுவதற்காகத்தான் இந்த உடலிலே வேதனைகள் கொண்டு பலவீனப்படுத்தினாலும், பிறர் நலம் பெற வேண்டுமென்று எண்ணத்தைத் தன்னுடைய உடலிலே ஓங்கி வளர்த்துக்கொண்ட, அந்த உணர்வின் ஆற்றல் கொண்டு, பிறிதொரு மனிதன் எண்ணங்களைத் தனக்குள் கவரச் செய்து, அந்த அன்பு உள்ளமான பாசத்தின் உணர்வுகளைத் தனக்குள் ஏங்கச் செய்து, அதன் வழிகளிலேதான் இந்த உடலைவிட்டு சென்றபின், உயிராத்மா விண் செல்லுவதற்கு, மற்ற மக்களின் நிலைகளிலே, துன்புற்றிருப்போரை இன்பமான நிலைகள் வருவதற்கு, அவருடைய ஆற்றலின் சக்தியைப் பயன்படுத்திச் சென்றார்கள்.

இதே போன்று, நாம் குடும்ப வாழ்க்கையில் இருப்போர் அனைவரும் இந்த ஆத்மசுத்தி செய்து, இறந்தவரின் உயிராத்மாவினுடைய நிலைகளை, இன்னொரு கூட்டுக்குள் புகாதபடி, அந்த அழியா ஒளிச் சரீரம் பெற வேண்டுமென்று, இன்று நமக்கு உணர்த்திய அந்த மகரிஷியின் அருள்

ஒளி வட்டத்துடன் செலுத்தப்படும் போது, அந்த மகரிஷியின் அருளாலே சமைத்து அனுப்பப்படும் ஒளி உணர்வுகளின் சத்துக்கள், நாம் அனுப்பும் இந்த உயிராத்மாக்களுக்கு ஆகாரமாகச் சென்று, அது ஒளி சரீரம் பெறுவது. திண்ணம்.

# 18 அனைவரும் விண்ணுலக ஆற்றலைப் பெறும் தகுதி

தன்னுள் விளைந்த சக்தியை சூரியன் ஒளியாக மாற்றி, உலகை சிருஷ்டிப்பது போன்று, ஒரு குடும்பத்திற்குள் சகோதரர்களும், குழந்தைகளும் இதேமாதிரி, தாய் தந்தையருடைய நிலைகளில் எண்ணத்தைச் செலுத்தி, எங்கள் தாய் தந்தையரின் அருளால், அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெறவேண்டும் என்று எண்ண வேண்டும் . அதைப் போன்று தாய் தந்தையரும், குழந்தைகள் அனைவரும் அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெறவேண்டும் என்று எண்ண வேண்டும்.

குழந்தைகள் ஒவ்வொரு எண்ணங்கள் கொண்டு, ஒவ்வொரு நிலைகள் வாழ்க்கையில் இருந்தாலும், அதே தாய் தந்தையருடன் இணைந்து செயல்பட வேண்டும்.

அவ்வாறு இணைந்து செயல்படும் போது, அந்த உணர்வின் சக்தியால், குடும்பத்திற்குள் தாய் தந்தையை சூரியனாகவும், அதே சமயம் நாம் அதற்குள் பிரபஞ்சத்திற்குள் ஒரு கோளாகவும், நம் வீட்டிற்குள் ஒரு பிரபஞ்சமாகச் சுழன்று, நம் எண்ணத்தினுடைய நிலைகள் தாய் தந்தையைப் பிரகாசிக்கச் செய்ய, அந்த ஒளியின் தன்மையை, நாம் எங்கு சென்றாலும் இயக்கக் கூடிய சக்தியாகும்.



எப்படி, கோள்கள் வெகு தூரம் சென்றிருந்தாலும் சூரிய சக்தியால், இயங்குகின்றதோ, இதைப் போன்று, தாய் தந்தையரின் அன்பால், நாம் எங்கு சென்றாலும் அந்த இயக்கச் சக்தியின் நிலைகளில் தொடர்பு பெறலாம்.

இவ்வாறு, நாம் தொடர்பு கொண்டு வந்தால்தான், நாம் முன்பு சொன்ன மாதிரி, இந்த பூமியில் இந்த உயிராத்மா வெளியே செல்லும் போது, நமது குழந்தைகள் அம்மா, அப்பாவின், உயிராத்மா அந்தச் சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டும் என்று எண்ணி, ஏங்கி, அவர்களை உந்தித் தள்ளமுடியும்.

நாம் உடலுடன் இருக்கப்படும் போது, நமக்குள் ஒருவருக்கொருவர் அன்புடன் நாம் எண்ணும்போது, விக்கல் பாய்கின்றது .துரோகம் செய்தார்கள் என்று எண்ணினால், புரையோடுகின்றது .

நம் உடலையும் இயக்கக்கூடிய சக்தி, தாய் தந்தையரின் நிலைகளிலும், அதே உணர்வுகள் கொண்ட அவர்கள் கருவிலே உருவாகிய, குழந்தைகளிடமும் உள்ளது.

இம்முறைப்படி தியானம் செய்யும் குழந்தைகள், அவர்களின் தாய் தந்தையர்கள் இறந்தபின். அந்த உயிராத்மாக்களை, சப்தரிஷி மண்டலத்துடன் இணைய வேண்டுமென்று எண்ணி, அவர்களை உந்திச் செலுத்தி, அந்த சப்தரிஷி மண்டலத்துடன் இணையச் செய்ய வேண்டும்.

அவ்வாறு இணையச் செய்யும் பொழுது, சப்தரிஷி மண்டலங்களிலிருந்து வரக்கூடிய உயர்ந்த ஒளியின் உணர்வுகளை, தாய் தந்தையரின் உடலை விட்டுப்பிரிந்த உயிராத்மாக்களை சுவாசிக்கச் செய்து, அதன் வழிகளில் அவர்களுக்கு ஆகாரமாக, சப்தரிஷி மண்டலங்களின் சக்தி கிடைக்கும்.

அவர்களுடைய உடலாக நாம் இருப்பதனாலே, வானை நோக்கி எண்ணி, அந்த சப்தரிஷிகளின் அருள் ஒளியை நாங்கள் பெறவேண்டும். சப்தரிஷி மண்டலங்களின் பேரருள் பேரொளியை நாங்கள் பெறவேண்டுமென்று எண்ண வேண்டும்.

உடலுடன் இருக்கும் நாம், அவ்வாறு ஏங்கி எண்ணும்போது, சப்தரிஷி மண்டலங்களுடன் ஐக்கியமான அந்த உணர்வுகள் மூலமாக, அங்கிருந்து நாம் பல சக்திகளை நாம் இந்தப் புவியிலேயும் பெற்று, இந்தப் புவியின் ஈர்ப்பிலே சிக்கியிருந்தாலும், நம் வாழ்க்கையில் வரக்கூடிய பல இன்னல்களையும் துரித நிலைகளில் மாய்த்து, நாம் அடுத்து இந்தச் சரீரத்தை விட்டுச் சென்றவுடன், ஒளி நிலை பெறும் தகுதியைப்

பெறுவோம் .இவைகளெல்லாம் அன்று மெய்ஞானிகள் காட்டிய பேருண்மைகள்.


அவர்கள் ஒளி சரீரம் பெறும்போது, நாம் இங்கிருந்து எண்ணத்தால் இயக்கப்படும் இந்த உணர்வின் சத்துக்களை, நம் தாய் தந்தை பெற்று, இந்த மனிதனின் எண்ண உணர்வுகளின் ஆற்றல்கள் அங்கே பெருகி, தன் நினைவின் ஆற்றலை, நாம் குழந்தைப் பருவமாக எவ்வாறு இங்கே பெறுகின்றோமோ, அதைச் சிறுகச் சிறுக வளர்ந்து, நம் எண்ண அலைகள் பெறுவது போன்று, கடும் தவம் இருந்து, இந்த உயிராத்மாக்கள் விண்ணிலே சென்றாலும், சப்தரிஷியின் உணர்வுகளை அங்கே பெற்று, அது வளர்ச்சி அடையும்.

அவ்வாறு வளர்ச்சி அடையும் பக்குவத்திலே, விண்ணின் ஆற்றலைத் தான் நினைவு கொண்டு ஈர்த்து, மரம், செடி கொடிகள், எப்படித் தன் சத்தின் தன்மையை இருந்த இடத்திலிருந்து பெறுகின்றதோ, இது போன்று, விண்ணில் இருக்கக் கூடிய இந்த உயிராத்மாக்கள், விண்ணிலே எங்கு வேண்டுமானாலும் நினைவைச் செலுத்தி, அந்த ஆற்றல் மிக்க நிலைகளை ஆகாரமாக எடுத்து, தன் இருப்பிடத்தில் இருந்து கொண்டு, உயர்ந்த சக்தியினுடைய நிலைகள் பெற்று, என்றும் 16 என்ற நிலைகளாக, “பெரு நிலைகள்” பெறும் தகுதியே, அது.

அவ்வாறு, என்றும் 16 என்ற அந்த நிலையை, நீங்கள் அனைவரும் அடைய எமது அருளாசிகள்,

# 19 சப்தரிஷி மண்டல ஆற்றலைப் பெற்று பூமியில் விஷத்தை நீக்கும் நிலை

இன்று இருக்கக்கூடிய விஷ உலகத்திற்குள், ஒவ்வொரு நாளும் மறவாது இந்த ஆத்மசுத்தியைக் கடைப்பிடியுங்கள். ஏற்கனவே உங்களுக்குச் சொல்லியபடி வாரத்தில் ஒரு நாள், தாய் தந்தையுடன் குழந்தைகளைக் கூட்டு தியானமிருக்கச் சொல்லிப் பழக்குங்கள்.



அவ்வாறு, கூட்டு தியானமிருந்து பழகியபின், அந்த வீட்டிலே, நமக்காக பல இன்னல்கள் பட்டு, எவ்வழியிலும், நம்மைக் காப்பாற்ற உணர்வைக்கூட்டி அதற்காக வேண்டி, பல இன்னல்களையும் அவர்கள் சுவாசிக்க நேர்ந்து, அதன் வழி வியாதிகள் பட்டு, அந்த உடலை விட்டுச் சென்ற, நமது முன்னோர்களின் உயிராத்மாக்களை, நீங்கள் இந்த தியானம் எடுத்துக் கொண்ட முறைப்படி, "சப்தரிஷி மண்டலத்துடன்" இணைய வேண்டுமென்று விண் செலுத்துங்கள்.

அப்படி விண் செலுத்துவதற்கு, நம் குருநாதர் காட்டிய அருள் வழிப்படி, நாம் அனைவருடைய எண்ணங்களும் துணை இருக்கின்றது. யார் இறந்தார்களோ, சூட்சமமடைந்த அந்த சரீரம் இலகுவானது, அந்த உணர்வின் ஆற்றல்தான் இருக்கும்.

இறந்தவர்களுடைய நிலைகளில், அந்த உணர்வுகள் மணமாகத்தான் இருக்கும். ஆனால், நமக்குள் அந்த உயிரின் நிலைகொண்டு, உணர்வுகள் எடை கூடி, இயக்கும் சக்தி உண்டு.

ஆகையினாலே, உங்கள் உணர்வின் சக்தியை, நீங்கள் எடுத்துக் கொண்ட இந்த சக்தி வாய்ந்த உணர்வுகளின் வலிமை கொண்டு, எளிதில் அந்த உயிராத்மாக்களை, சப்தரிஷி மண்டலங்களோடு இணைத்துவிடலாம்.

எனவே, இந்த மெய் ஒளியின் தன்மையை நாம் எடுத்து, இந்த முறைப்படி தியானமிருந்தவர்கள், இறந்தவர்களுடைய உயிராத்மாவை சப்தரிஷி மண்டலத்துடன் இணைத்து, அவர்கள் ஒளிச் சரீரம் பெற வேண்டுமென்று ஏங்கி விண் செலுத்துங்கள்.

அவ்வாறு, அவர்களை முதலில் விண் செலுத்துகின்றீர்கள், அவர்கள் மெய் ஒளியுடன் கலந்தவுடன், உங்கள் உணர்வுடன் கலந்த அவர்கள், அங்கே வளர்ச்சி பெறும்போது, நீங்கள் சப்தரிஷி மண்டலத்தை எண்ணும்போது. அங்கிருக்கக்கூடிய ஆற்றலை நீங்கள் இலகுவாகப் பெற முடியும்.

நாம் இப்படி வழித் தொடர்ந்து செய்வோமேயானால், இந்தக் குறுகிய காலத்திற்குள் விஷ ஆற்றல்கள் இந்த உலகில் பரவி, நம் எண்ணங்களை அழிப்பதற்குமுன், நாம் இப்பொழுதிலிருந்தே தயாரானால்தான், நம் எண்ணத்தை அழிக்கச் செய்யும் அந்த ஆற்றலின் உணர்வுகளை நாம் அழித்துவிட்டு, இந்த உடலை விட்டுச் சென்றால், நாம் அனைவரும் விண் செல்ல முடியும்.

ஆக காலம், இதையெல்லாம் சாத்தியப்படுமோ என்று எண்ணாதபடி, ஒவ்வொரு நிமிடத்திலும், நாம் இதை இலகுவான நிலைகளில் பெறக்கூடிய, அந்த மெய்ஞானிகள் சென்ற வழிகளிலே நாம் செல்லுகின்றோம்.

அதன் வழிகளில் நிச்சயமாக, உறுதியான வழிகளில் நாம் பெறுகின்றோம் என்ற இந்த தன்னம்பிக்கையுடன், நம் உயிராத்மா, இந்த உடலில் இருந்தே, அந்த மகரிஷிகளின் அருள் சக்தி பெற்று, நம் உயிராத்மா ஒளியாகும் நிலைகளில், நம் மூச்சும் பேச்சும் எதிர்மறையான உணர்வுகளில் இருந்தாலும், வழிகாட்டியான எண்ணங்களாக அறிந்துணர்ந்து செயல்படும் நம் வாழ்க்கையிலே, இந்த உடலை விட்டுச் சென்றபின், அந்த உயிரின் ஒளியான நிலைகளுக்கு நாம் செல்வோம் என்று, இன்று உறுதியான நிலைகள் கொண்டு, "நாம் ஒளி வழி செல்வோம்,

மகரிஷிகளின் அருள் வழி செல்வோம், அந்த மகரிஷிகளின் அருள் ஒளியாலே, நமக்குள். மெய் ஒளியின் அலைகளை நமக்குள் பெறுவோம்”.




மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் தபோவனம்

புஞ்சை புளியம்பட்டி - 638 459

ஈரோடு மாவட்டம்

தமிழ் நாடு

இந்தியா

தொலை பேசி - 04295 267318


http://omeswara.blogspot.in/